# பெரியார் பல்கலைக்கழகம்

**(NAAC 'A++' Grade - State University - NIRF Rank 56**
**State Public University Rank 25)**

**சேலம் - 636 011**

## தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மையம்

## முதுகலைத் தமிழ்

## முதலாமாண்டு – இரண்டாம் பருவம்

## தாள் - V:

## அற இலக்கியம்

**(Candidates admitted from 2025-26 onwards)**

# PERIYAR UNIVERSITY

## CENTRE FOR DISTANCE AND ONLINE EDUCATION (CDOE)

## M.A தமிழ் 2025 admission onwards

### CORE V

அற இலக்கியம்

Prepared by:

முனைவர்.க.மைதிலி
பேராசிரியர்
தமிழ்த் துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்-11

Scrutinized & Verified by:

BOS Members,
Centre for Distance and Online Education (CDOE)
Periyar University
Salem - 636011

## முதுகலைத்தமிழ் - இரண்டாம் பருவம்

## தாள்: 08 அற இலக்கியம் (C05)

| Course Code | Course Name | category | L | T | P | S | Credits | Ins.Hrs | Marks | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | CIA | External | Total |
| 23UPTAM1C05 | அற இலக்கியம் | **Core** | Y | **-** | **-** | **-** | **5** | **6** | **25** | **75** | **100** |
| **Pre-requisite** | | தமிழில் தோன்றியுள்ள அறஇலக்கிய வரலாற்றை அறிந்திருத்தல் | | | | | | | | | |

**Learning Objectives:**

**பாடநோக்கங்கள்**

- அறஇலக்கியங்கள் தோன்றுவதற்கான காரணங்களை உணர்த்ததுதல்.
- அறவியல் கோட்பாடுகளைக் கற்பித்தல்
- கால மாற்றங்களால் விளைந்த அற மாற்றங்களையும் மானுட மேன்மைகளையும் அறிதல்.
- காலந்தோறும் வளர்ந்து வந்த அறஇலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகளையும் அறங்களையும் அறியச் செய்தல்
- அற இலக்கியங்களின் பாடற்பொருண்மையையும் வடிவத்தையும் கற்பித்தல்

**Expected Course Outcomes: ,ப்பாடத்தைக் கற்பதால் விளையும் பயன்கள்**

| | | |
|---|---|---|
| **CO 1** | பண்டைத் தமிழரின் அறவியல் சிந்தனைகளை மாணாக்கர்கள் அறிந்துகொள்வர். | K1, K4 |
| **CO 2** | தமிழ்ர்தம் சமூகம்சார் அறவியல் கோட்பாடுகளை மாணவர்கள் கற்றிருப்பர். | K1, K5 |
| **CO 3** | அறநூல்கள் உணர்த்தும் அறமாற்றங்களையும் மானுட மேன்மையையும் அறிந்துகொள்வர். | K3, K6 |
| **CO 4** | காலந்தோறும் தோன்றியுள்ள அறநூல்கள் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகளையும் அறங்களையும் அறிந்திருப்பர் | K4, K5 |
| **CO 5** | காலந்தோறுமான அறநூல்களின் பாடற் பொருண்மையையும் வடிவத்தையும் கற்பர். | K5, K6 |
| K1 - Remember; K2 - Understand; K3 - Apply; K4 - Analyze; K5 - Evaluate; K6 - Create | | |

| | |
|---|---|
| **Unit:I** | அறம் - விளக்கம், அறமும் நீதியும், அற இலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி, அற இலக்கியம் தோன்றுவதற்கான காரணங்கள், சமூகப்பின்புலம், அரசியல் பின்புலம், மக்கள் மனதில் மாற்றம், அறஇலக்கியங்கள் தோன்றியதன் விளைவு,சமூக மாற்றம், காலந்தோறும் அறஇலக்கியங்கள், இன்றைய நிலையில் அறம். |
| **Unit:II** | திருக்குறள் - அறத்துப்பால்<br>8,10,11,12,19,20,23,24,25,32 வரை (10அதிகாரங்கள்) |
| **Unit:III** | திருக்குறள் - பொருட்பால் 65,66,67,68,76,79,80,81,82,83 (10அதிகாரங்கள்)<br>காமத்துப்பால் - 121,125,132 (3 அதிகாரம்) |
| **Unit:IV** | நாலடியார் - பொருட்பால்<br>நட்பில் பிழைபொருத்தல் 23ஆவது அதிகாரம்<br>இனியவை நாற்பது முழுவதும் |
| **Unit:V** | திரிகடுகம் 1-21 (21 பாடல்கள்), மூதுரை முழுவதும்<br>ஆத்திச்சூடி அன்று முதல் இன்றுவரை<br>ஔவையார், பாரதியார், பாரதிதாசன், சிற்பி |

**Reference Books**

- அறஇலக்கியப் பாடல்களை அந்தந்த நூற்பதிப்புகளில் பயின்றுகொள்ளவும்.
- திருக்குறள் நீதிஇலக்கியம், க.த.திருநாவுக்கரசு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- அறம் அதிகாரம், 1977. ராஜ்கௌதமன், விடியல் பதிப்பகம்,கோவை.

**Related Online Contents [MOOC, SWAYAM, NPTEL, Websites etc.]**

**Web Sources**

- **Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>**
- **Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library**
- **Project Madurai - www.projectmadurai.org.**
- **Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.**
- **Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.**
- **Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com**
- **Tamil Books on line- books.tamil cube.com**
- **Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org**
- **Tamil novels on line - books.tamilcube.com**

**Strong (மிகநன்று) -3,Medium (நன்று)-2, Low (மிதம்)-1**

| UNIT | CONTENTS | PAGE |
|---|---|---|
| 1 | அறம் - விளக்கம், அறமும் நீதியும், அற இலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி, அற இலக்கியம் தோன்றுவதற்கான காரணங்கள், சமூகப்பின்புலம், அரசியல் பின்புலம், மக்கள் மனதில் மாற்றம், அறஇலக்கியங்கள் தோன்றியதன் விளைவு,சமூக மாற்றம், காலந்தோறும் அறஇலக்கியங்கள், இன்றைய நிலையில் அறம். | |
| 2 | திருக்குறள் - அறத்துப்பால்<br>8,10,11,12,19,20,23,24,25,32 வரை (10அதிகாரங்கள்) | 5 - 24 |
| 3 | திருக்குறள் - பொருட்பால் 65,66,67,68,76,79,80,81,82,83 (10அதிகாரங்கள்)<br>காமத்துப்பால் - 121,125,132 (3 அதிகாரம்) | 25 - 52 |
| 4 | நாலடியார் - பொருட்பால்<br>நட்பில் பிழைபொருத்தல் 23ஆவது அதிகாரம்<br>இனியவை நாற்பது முழுவதும் | 53 - 71 |
| 5 | திரிகடுகம் 1-21 (21 பாடல்கள்)<br>மூதுரை முழுவதும்<br>ஆத்திச்சூடி அன்று முதல் இன்றுவரை<br>ஔவையார், பாரதியார், பாரதிதாசன், சிற்பி | 72 - 127 |

# அலகு - 2 திருக்குறள் - அறத்துப்பால்

## 8,10,11,12,19,20,23,24,25,32 வரை (10அதிகாரங்கள்)

**நோக்கம்: திருக்குறள்**

- **இலக்கிய அளவில் திருக்குறள் நடைமுறை அறநெறிக் கருத்துக்களைச் செய்யுள் வடிவில் சுருக்கமாகவும் நேர்த்தியாகவும் தெளிவாகவும்வலுவுடனும் அனைவரும் ஏற்க்குமாறும் தரும் நூலாகும்.**
    - **மாந்தர்கள் தம் அகவாழ்விலும் புற வாழ்விலும் நலமுடன் வாழ்வதற்கு தேவையான அடிப்படை பண்புகளை விளக்குகிறது .**
    - **இந்நூல் அறநெறிகளை பற்றிய உலகின் மிகச்சிறந்த படைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.**
    - **அறத்தை தெரிந்து கொண்டு அதன் படி வாழ்வது .**
    - **சமூக ஒழுக்கங்கள் குறித்த அறங்களை பற்றியும் இன்ப வாழ்வு குறித்த அறங்களை பற்றியும் பேசுகின்றன.**

### 8.அன்புடைமை

1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?

   ஆர்வலர் புன்கண்நீர் பூசல் தரும்.

பொருள்:

அன்புக்கும் அடைத்துவைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே உள்ளே இருக்கும் அன்பைப் பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.

2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

   என்பும் உரியர் பிறர்க்கு.

பொருள்:

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர் அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.

3. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு

என்போடு இயைந்த தொடர்பு.

பொருள்:

அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்தி இருக்கின்ற உறவு, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.

4. அன்புஈனும் ஆர்வம் உடமை அதுஈனும்

நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.

பொருள்:

அன்பு, பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும்: அ∴து எல்லோரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.

5. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து

இன்புற்றார் எய்தும் சிறப்பு.

பொருள்:

உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.

6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்

மறத்திற்கும் அ∴தே துணை.

பொருள்:

அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர் ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாக நிற்கின்றது.

7. என்பு இலதனை வெயில்போலக் காயுமே

அன்பு இலதனை அறம்.

பொருள்:

எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவதுபோல், அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.

8. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்

வற்றல் மரம்தளிர்த் தற்று.

பொருள்:

அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர்வாழ்க்கை வளமற்ற பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்றது.

9. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை

அகத்துறுப்பு அன்பி லவர்க்கு?

பொருள்:

உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் புறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன பயன் செய்யும்?

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு.

பொருள்:

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும் அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும்.

## 10.இனியவை கூறல்

1.இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்

செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

பொருள்:

அன்பு கலந்து வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள், மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும்.

2. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து

இன்சொலன் ஆகப் பெறின்.

பொருள்:

முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்.

3. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்

இன்சொ லினதே அறம்.

பொருள்:

முகத்தால் விரும்பி - இனிமையுடன் நோக்கி - உள்ளம் கலந்து இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.

4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்

இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

பொருள்:

யாரிடத்திலும் இன்புறத்தக்க இன்சொல் வழங்குவோர்க்குத் துன்பத்தை மிகுதிப்படுத்தும் வறுமை என்பது இல்லையாகும்.

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு

அணில்ல மற்றுப் பிற.

பொருள்:

வணக்கம் உடையவனாகவும் இன்சொல் வழங்குவோனாகவும் ஆதலே ஒருவனுக்கு அணிகலனாகும், மற்றைய அணிகள் அணிகள் அல்ல.

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை

நாடி இனிய சொலின்.

பொருள்:

பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடைய சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய அறம் வளர்ந்து பெருகும்.

7. நயன் ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று

பண்பின் தலைப்பிரியாச் சொல்.

பொருள்:

பிறர்க்கு நன்மையான பயனைத் தந்து நல்ல பண்பிலிருந்து நீங்காத சொற்கள், வழங்குவோனுக்கும் இன்பம் தந்து நன்மை பயக்கும்.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்

இம்மையும் இன்பம் தரும்.

பொருள்:

பிறர்க்குத் துன்பம் விளைவிக்கும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் மறுமைக்கும் இம்மைக்கும் வழங்குவோனுக்கு இன்பம் தரும்.

9. இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ

வன்சொல் வழங்கு வது?

பொருள்:

இனிய சொற்கள் இன்பம் பயத்தலைக் காண்கின்றவன், அவற்றிற்கு மாறான வன்சொற்களைவழங்குவது என்ன பயன் கருதியோ?

10. இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

பொருள்:

இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைவிட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும்போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போல்.

## 11.செய்நன்றி அறிதல்

1. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்

வானகமும் ஆற்ற லரிது.

பொருள்:

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிறுக்கப் பிறர் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.

2. காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது.

பொருள்:

உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட மிகப் பெரிதாகும்.

3. பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்

நன்மை கடலிற் பெரிது.

பொருள்:

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையைஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரிதாகும்.

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்

கொள்வர் பயன்தெரி வார்.

பொருள்:

ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

5. உதவி வரைத்தன்று உதவி உதவி

செயப்பட்டார் சால்பின் வரைத்து.

பொருள்:

கைம்மாறாகச் செய்யும் உதவி முன்செய்த உதவியின் அளவை உடையது அன்று

உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க

துன்பத்துள் துப்பாயார் நட்பு.

பொருள்:

குற்றமற்றவரின் உறவை எப்போதும் மறத்தலாகாது, துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது.

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்

விழுமம் துடைத்தவர் நட்பு.

பொருள்:

தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர்.

8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று.

பொருள்:

ஒருவர் முன்செய்த நன்மையை மறப்பது அறம் அன்று அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும்.

9. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த

ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

பொருள்:

முன் செய்த உதவி செய்தவர் பின்பு கொன்றாற் போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

பொருள்:

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும் ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.

## 12.நடுவுநிலைமை

1. தகுதி எனஒன்று நன்றே பகுதியால்

பாற்பட்டு ஒழுகப் பெறின்.

பொருள்:

அந்தந்தப் பகுதிதோறும் முறையோடு பொருந்தி ஒழுகப்பெற்றால், நடுவுநிலைமை என்று கூறப்படும் அறம் நன்மையாகும்.

2. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி

எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

பொருள்:

நடுவுநிலைமை உடையவனின் செல்வவளம் அழிவில்லாமல் அவனுடைய

வழியிலுள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும்.

3. நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை

அன்றே ஒழிய விடல்.

பொருள்:

தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவுநிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிட வேண்டும்.

4. தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தால் காணப் படும்.

பொருள்:

நடுவுநிலைமை உடையவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சிநிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும்.

5. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்

கோடாமை சான்றோர்க்கு அணி

பொருள்

கேடும் ஆக்கமும் வாழ்வில் இல்லாதவை அல்ல் ஆகையால் நெஞ்சில் நடுவுநிலைமை தவறாமல் இருத்தலே சான்றோர்க்கு அழகாகும்.

6. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்

நடுஒரீ, அல்ல செயின்.

பொருள்:

தன் நெஞ்சம் நடுவுநிலைமை நீங்கித் தவறு செய்ய நினைக்குமாயின், நான் கெடப்போகின்றேன் என்று ஒருவன் அறிய வேண்டும்.

7. கெடுவாக வையாது உலகம் நடுவாக

நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

பொருள்:

நடுவுநிலையாக நின்று அறநெறியில் நிலைத்து வாழ்கின்றவன் அடைந்த வறுமை நிலையைக் கேடு என்று கொள்ளாது உலகம்.

8. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்

கோடாமை சான்றோர்க்கு அணி.

பொருள்:

முன்னே தான் சமமாக ,ருந்து, பின்பு பொருளைச் சீர் தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

9. சொற்கோட்டம் ,ல்லது செப்பம் ஒருதலையா

உள்கோட்டம் இன்மை பெறின்.

பொருள்:

உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால், சொல்லினும் கோணுதல் இல்லா திருத்தல் நடுவுநிலைமை.

10. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்

பிறவும் தமபோல் செயின்.

பொருள்:

பிறர் பொருளையும் தம்பொருள்போல் போற்றிச் செய்தால், அதுவே வாணிகம் செய்வோர்க்கு உரிய நல்ல வாணிக முறையாகும்.

## 19.புறங்கூறாமை

1. அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்

புறங்கூறான் என்றல் இனிது.

பொருள்:

ஒருவன் அறத்தைப் போற்றிக் கூறாதவனாய் அறமல்லாதவற்றைச் செய்தாலும் மற்றவனைப் பற்றிப் புறங்கூறாமல் இருக்கிறான் என்று சொல்லப்படுதல் நல்லது.

2. அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீதே

புறன்அழீஇப் பொய்த்து நகை.

பொருள்:

அறத்தை அழித்துப் பேசி அறமல்லாதவைகளைச் செய்தலைவிட, ஒருவன் இல்லாதவிடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் பொய்யாக முகமலர்ந்து பேசுதல் தீமையாகும்.

3. புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்

அறங்கூறும் ஆக்கம் தரும்.

பொருள்:

புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர்வாழ்தலைவிட, அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறந்துவிடுதல் அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்.

4. கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க

முன்இன்று பின்நோக்காச் சொல்.

பொருள்:

எதிரே நின்று கணோட்டம் இல்லாமல் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம் நேரில் இல்லாதபோது பின் விளைவை ஆராயாத சொல்லைச் சொல்லக்கூடாது.

5. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்

புன்மையால் காணப் படும்.

பொருள்:

அறத்தை நல்லதென்று போற்றும் நெஞ்சம் இல்லாத தன்மை, ஒருவன் மற்றவனைப்பற்றிப் புறங்கூறுகின்ற சிறுமையால் காணப்படும்.

6. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்

திறன்தெரிந்து கூறப் படும்.

பொருள்:

மற்றவனைட்பற்றிப் புறங்கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத்தக்கவை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப்படுவான்.

7. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி

நட்பாடல் தேற்றா தவர்.

பொருள்:

மகிழும்படியாகப் பேசி நட்புக்கொள்ளுதல் நன்மை என்று தெளியாதவர் தம்மைவிட்டு நீங்கும்படியாகப் புறங்கூறி நண்பரையும் பிரித்து.

8. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்

என்னைகொல் ஏதிலார் மாட்டு?

பொருள்:

நெருங்கிப் பழகியவரின் குற்றத்தையும் புறங்கூறித் தூற்றும் இயல்புடையவர், பழகாத அயலாரிடத்து என்ன செய்வாரோ?

9. அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்

புன்சொல் உரைப்பான் பொறை?

பொருள்:

ஒருவர் நேரில் இல்லாதது கண்டு பழிச்சொல் கூறுவோனுடைய உடல்பாரத்தை, "இவனையும் சுமப்பதே எனக்கு அறம்" என்று கருதி நிலம் சுமக்கின்றதோ?

10. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்

தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு.

பொருள்:

அயலாருடைய குற்றத்தைக் காண்பதுபோல் தம் குற்றத்தையும் காணவல்லவரானால், நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ?

## 20.பயனிலசொல்லாமை

1. பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்

எல்லாரும் எள்ளப் படும்.

பொருள்:

கேட்டவர் பலரும் வெறுக்கும்படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லுகின்றவன், எல்லோராலும் இகழப்படுவான்.

2. பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல

நட்டார்கண் செய்தலின் தீது.

பொருள்:

பலர் முன்னே பயனில்லாத சொற்களைச் சொல்லுதல், நண்பரிடத்தில் அறம் இல்லாத செயல்களைச் செய்தலை விடத் தீமையானதாகும்.

3. நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல

பாரித்து உரைக்கும் உரை.

பொருள்:

ஒருவன் பயனில்லாத பொருள்களைப் பற்றி விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் அறம் இல்லாதவன் என்பதை அறிவிக்கும்.

4. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்

பண்பில்சொல் பல்லா ரகத்து.

பொருள்:

பயனோடு பொருந்தாத பண்பு இல்லாத சொற்களைப் பலரிடத்தும் சொல்லுதல், அறத்தோடு பொருந்தாமல் நன்மையிலிருந்து நீங்கச் செய்யும்.

5. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல

நீர்மை யுடையார் சொலின்.

பொருள்:

பயனில்லாத சொற்களை நல்ல பண்பு உடையவர் சொல்லுவாரானால், அவருடைய மேம்பாடு அவர்க்குரிய மதிப்போடு நீங்கிவிடும்.

6. பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்

மக்கட் பதடி எனல்.

பொருள்:

பயனில்லாத சொற்களைப் பலமுறையும் சொல்லுகின்ற ஒருவனை மனிதன் என்று சொல்லக்கூடாது மக்களுள் பதர் என்றே சொல்ல வேண்டும்.

7. நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்

பயன்இல சொல்லாமை நன்று.

பொருள்:

அறம் இல்லாதவற்றைச் சொன்னாலும் சொல்லலாம் சான்றோர் பயனில்லாத சொற்களைச் சொல்லாமல் இருத்தல் நன்மையாகும்.

8. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்

பெரும்பயன் இல்லாத சொல்.

பொருள்:

அருமையான பயன்களை ஆராயவல்ல அறிவை உடைய அறிஞர், மிக்க பயன் இல்லாத சொற்களை ஒருபோதும் சொல்லமாட்டார்.

9. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த

மாசறு காட்சி யவர்.

பொருள்:

மயக்கத்திலிருந்து தெளிந்த மாசற்ற அறிவை உடையவர், பயன் நீங்கிய சொற்களை ஒருகால் மறந்தும் சொல்லமாட்டார்.

10. சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க

சொல்லில் பயனிலாச் சொல்.

பொருள்:

சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்லவேண்டும் பயன் இல்லாதவைகளாகிய சொற்களைச் சொல்லவேகூடாது.

## 23.ஈகை

1. வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்

குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

பொருள்:

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது. மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது.

2. நல்ஆறு எனினும் கொளல்தீது மேலுலகம்

இல்எனினும் ஈதலே நன்று.

பொருள்:

பிறரிடமிருந்து பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது. மேலுலகம் இல்லையென்றாலும் பிறர்க்குக் கொடுப்பதே நல்லது.

3. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்

குலன்உடையான் கண்ணே உள.

பொருள்:

“யான் வறியவன் என்னும் துன்பச் சொல்லை ஒருவன் உரைப்பதற்கு முன் அவனுக்கு கொடுக்கும் தன்மை, நல்ல குடிப்பிறப்பு உடையவனிடம் உண்டு.

4. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்

இன்முகம் காணும் அளவு.

பொருள்:

பொருள் வேண்டும் என்று இரந்தவரின் மகிழ்ந்த முகத்தைக் காணும் வரைக்கும் (இரத்தலைப் போலவே) இரந்து கேட்கப்படுதலும் துன்பமானது.

5. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை

மாற்றுவார் ஆற்றலின் பின்.

பொருள்:

தவ வலிமை உடையவரின் வலிமை பசியைப் பொறுத்துக் கொள்ளலாகும். அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும்.

6. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்

பெற்றான் பொருள்வைப் புழி.

பொருள்:

வறியவரின் கடும்பசியைத் தீர்க்கவேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

7. பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்

தீப்பிணி தீண்டல் அரிது.

பொருள்:

தான் பெற்ற உணவைப் பலரோடும் பகுத்து உண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்று கூறப்படும் தீய நோய் அணுகுதல் இல்லை.

8. ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை

வைத்துஇழக்கும் வன்க ணவர்?

பொருள்:

தாம் சேர்த்துள்ள பொருளைப் பிறர்க்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின் இழந்துவிடும் வன்கண்மை உடையவர் பிறர்க்குக் கொடுத்து மகிழும் மகிழ்ச்சியை அறியாரோ?

9. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய

தாமே தமியர் உணல்.

பொருள்:

பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தமியராய் உண்பது வறுமையால் இரப்பதைவிடத் துன்பமானது.

10. சாதலின் இன்னாது இல்லை இனிதுஅதூஉம்

ஈதல் இயையாக் கடை.

பொருள்:

சாவதைவிடத் துன்பமானது வேறொன்றும் இல்லை. ஆனால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாத நிலை வந்தபோது அச்சாதலும் இனியதே ஆகும்.

## 24.புகழ்

1. ஈதல்: இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு.

பொருள்:

வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

2. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று

ஈவார்மேல் நிற்கும் புகழ்.

பொருள்:

புகழ்ந்து சொல்கின்றவர் சொல்பவை எல்லாம் வறுமையால் இரப்பவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவுகின்றவரின் மேல் நிற்கின்ற புகழேயாகும்.

3. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்

பொன்றாது நிற்பதுஒன்று இல்.

பொருள்:

உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலைநிற்க வல்லது வேறொன்றும் இல்லை.

4. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்

போற்றாது புத்தேள் உலகு.

பொருள்:

நிலவுலகின் எல்லையில் நெடுங்காலம் நிற்கவல்ல புகழைச் செய்தால், வானுலகம் (அவ்வாறு புகழ் செய்தாரைப் போற்றுமே அல்லாமல்) தேவரைப் போற்றாது.

5. நத்தம்போல் கேடும் உளதுஆகும் சாக்காடும்

வித்தகர்க்கு அல்லால் அரிது.

பொருள்:

புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்வில் கேடும், புகழ் நிலை நிற்பதாகும் சாவும், அறிவில் சிறந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு இல்லை.

6. தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று.

பொருள்:

ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும் அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமலிருப்பது நல்லது.

7. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை

இகழ்வாரை நோவது எவன்?

பொருள்:

தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழமுடியாதவர் தம்மைத் தாம் நொந்துகொள்ளாமல் தம்மை இகழ்கின்றவரை நொந்துக்கொள்ளக் காரணம் என்ன?

8. வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்

எச்சம் பெறாஅ விடின்.

பொருள்:

தமக்குப் பின் எஞ்சி நிற்பதாகிய புகழைக் பெறாவிட்டால் உலகத்தார் எல்லார்க்கும் அத்தகைய வாழ்க்கை பழி என்று சொல்லுவர்.

9. வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா

யாக்கை பொறுத்த நிலம்.

பொருள்:

புகழ் பெறாமல் வாழ்வைக் கழித்தவருடைய உடம்பைச் சுமந்த நிலம், வசையற்ற வளமான பயனாகிய விளைவு இல்லாமல் குன்றிவிடும்.

10. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய

வாழ்வாரே வாழா தவர்.

பொருள்:

தாம் வாழும் வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழ்கின்றவர் புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர்.

## 25.அருளுடைமை

1. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்

பூரியார் கண்ணும் உள.

பொருள்:

பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன் (உயர்ந்தவரிடத்தில் மட்டும் உள்ள) அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வமாகும்.

2. நல்லாற்றான் நாடி அருளாள்க: பல்லாற்றான்

தேரினும் அ∴தே துணை.

பொருள்:

நல்ல வழியால் ஆராய்ந்து அருளுடையவர்களாக விளங்க வேண்டும். பல வழிகளால் ஆராய்ந்து கண்டாலும் அருளே வாழ்க்கைக்குத் துணையாக உள்ளது.

3. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த

இன்னா உலகம் புகல்.

பொருள்:

அறியாமையாகிய இருள் பொருந்திய துன்ப உலகில் இருந்து வாழும் வாழ்க்கை, அருள் பொருந்திய நெஞ்சம் உடையவர்களுக்கு இல்லை.

4. மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு இல்லென்ப

தன்உயிர் அஞ்சும் வினை.

பொருள்:

தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை, உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு இல்

5. அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்

மல்லல்மா ஞாலம் கரி.

பொருள்:

அருளுடையவராக வாழ்கின்றவர்க்குத் துன்பம் இல்லை் காற்று இயங்குகின்ற வளம் பொருந்திய பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று ஆவர்.

6. பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி

அல்லவை செய்துஒழுகு வார்.

பொருள்:

அருள் இல்லாதவராய் அறமல்லாதவைகளைச் செய்து நடப்பவர்களை, உறுதிப்பொருளாகிய அறத்திலிருந்து நீங்கித் தம் வாழ்க்கையின் குறிக்கோளை மறந்தவர் என்பர்.

7. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு

இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

பொருள்:

பொருள் இலாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதவாறுபோல, உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லையாம்.

8. பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள் அற்றார்

அற்றார்மற்று ஆதல் அரிது.

பொருள்:

பொருள் இல்லாதவர் ஒரு காலத்தில் வளம் பெற்று விளங்குவர் அருள் இல்லாதவர் வாழ்க்கையின் பயன் அற்றவரே அவர் ஒரு காலத்திலும் சிறந்து விளங்குதல் இல்லை.

9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்

அருளாதான் செய்யும் அறம்.

பொருள்:

அருள் மேற்கொள்ளாதவன் செய்கின்ற அறச்செயலை ஆராய்ந்தால், அஃது அறிவு தெளியாதவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் கண்டாற் போன்றது.

10. வலியார்முன் தன்னை நினைக்க,தான் தன்னின்

மெலியார்மேல் செல்லும் இடத்து

பொருள்:

(அருள் இல்லாதவன்) தன்னைவிட மெலிந்தவர்மேல் துன்புறுத்தச் செல்லும்போது, தன்னைவிட வலியவரின் முன் தான் அஞ்சி நிற்கும் நிலைமையை நினைக்கவே.

## 32.இன்னா செய்யாமை

1.சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா

செய்யாமை மாசுஅற்றார் கோள்.

பொருள்:

சிறப்பைத் தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம்.

2. கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா

செய்யாமை மாசுஅற்றார் கோள்.

பொருள்:

ஒருவன் கறுவுகொண்டு துன்பம் செய்த போதிலும் அவனுக்குத் திரும்பத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம்.

3. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்

உய்யா விழுமம் தரும்.

பொருள்:

தான் ஒன்றும் செய்யாதிருக்கத் தனக்குத் தீங்கு செய்தவர்க்கும் துன்பமானவற்றைச் செய்தால், செய்த பிறகு தப்பமுடியாத துன்பத்தையே கொடுக்கும்.

4. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயம் செய்து விடல்.

பொருள்:

இன்னா செய்தவரைத் தண்டித்தல், அவரே நாணும் படியாக அவர்க்கு நல்லுதவி செய்து, அவருடைய தீமையையும் நன்மையயும் மறந்துவிடுதலாகும்.

5. அறிவினான் ஆகுவது உண்டோ பிறதின்நோய்

தம்நோய்போல் போற்றாக் கடை?

பொருள்:

மற்ற உயிரின் துன்பத்தைத் தன் துன்பம்போல் கருதிக் காப்பாற்றாவிட்டால், பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ?

6. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை

வேண்டும் பிறன்கண் செயல்.

பொருள்:

ஒருவன் துன்பமானவை என்று தன் வாழ்க்கையில் கண்டு உணர்ந்தவைகளை மற்றவனிடத்தில் செய்யாமல் தவிர்க்க வேண்டும்.

7. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்

மாணாசெய் யாமை தலை.

பொருள்:

எவ்வளவு சிறியதாயினும் எக்காலத்திலும் எவரிடத்திலும் மனத்தால் எண்ணி உண்டாகின்ற துன்பச் செயல்களைச் செய்யாதிருத்தலே சிறந்தது.

8. தன்உயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ

மன்னுயிர்க்கு இன்னா செயல்?

பொருள்:

தன் உயிர்க்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், மற்ற உயிர்களுக்கு அத்துன்பங்களைச் செய்தல் என்ன காரணத்தாலோ?

9. பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா

பிற்பகல் தாமே வரும்.

பொருள்:

முற்பகலில் மற்றவர்க்குத் துன்பமானவற்றைச் செய்தால் அவ்வாறு செய்தவர்க்கே பிற்பகலில்

துன்பங்கள் தாமாகவே வந்து சேரும்.

10. நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்

நோயின்மை வேண்டு பவர்.

பொருள்:

துன்பம் எல்லாம் துன்பம் செய்தவரையே சார்வன. ஆகையால் துன்பம் இல்லாமல் வாழ்தலை விரும்புகின்றவர், பிறர்க்குத் துன்பம் செய்யார்.

# அலகு-3

**திருக்குறள் - பொருட்பால் 65,66,67,68,76,79,80,81,82,83 (10அதிகாரங்கள்)**

**காமத்துப்பால் - 121,125,132 (3 அதிகாரம்)**

## 65.சொல்வன்மை

1.நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்

யாநலத்து உள்ளதூஉம் அன்று.

பொருள்:

நாவன்மையாகிய நலம் ஒருவகைச் செல்வம் ஆகும் அந்த நாநலம் தனிச்சிறப்புடையது. ஆகையால் மற்ற எந்த நலங்களிலும் அடங்குவது அன்று.

2. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்

காத்துஓம்பல் சொல்லின்கண் சோர்வு.

பொருள்:

ஆக்கமும் கேடும் சொல்கின்ற சொல்லால் வருதலால் ஒருவன் தன்னுடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ள வேண்டும்.

3. கேட்டார்ப் பிணிக்குந் தகைஅவாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாஞ் சொல்

பொருள்:

சொல்லும்போது கேட்டவரைத் தன் வயப்படுத்தும் பண்புகளுடன் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும்

4. திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்

பொருளும் அதனின்ஊங்கு இல்.

பொருள்:

சொல்லின் திறத்தை அறிந்து சொல்லை வழங்க வேண்டும் அத்தகைய சொல்வன்மையைவிடச் சிறந்த அறமும் பொருளும் இல்லை.

5. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை

வெல்லும்சொல் இன்மை அறிந்து.

பொருள்:

வேறொரு சொல் அந்தச் சொல்லை வெல்லும் சொல்லாக இல்லாதிருத்தலை அறிந்த பிறகே சொல்லக் கருதியதைச் சொல்லவேண்டும்.

6. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்

மாட்சியின் மாசுஅற்றார் கோள்.

பொருள்:

பிறர் விரும்பும் படியாகத் தாம் சொல்லி, பிறர் சொல்லும் போது அச்சொல்லின் பயனை ஆராய்ந்து கொள்ளுதல் மாசற்ற சிறப்புடையவரின் கொள்கையாகும்.

7. சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை

இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

பொருள்:

தான் கருதியவற்றை நன்கு சொல்ல வல்லவனாய், சொல்லும் போது சோர்வு இல்லாதவனாய்,

அஞ்சாதவனாய் உள்ளவனை மாறுபாட்டால் வெல்வது யார்க்கும் முடியாது.

8. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது

சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

பொருள்:

கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும்.

9. பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற

சிலசொல்லல் தேற்றா தவர்.

பொருள்:

குற்றமற்றவையாகிய சில சொற்களைச் சொல்லத் தெரியாதவர், உண்மையாகவே பல சொற்களைச் சொல்லிக் கொண்டிருக்க விரும்புவர்.

10. இணர்ஊழ்த்தும் நாறா மலர் அனையர் கற்றது

உணர விரித்துஉரையா தார்.

பொருள்:

தாம் கற்ற நூற்பொருளைப் பிறர் உணருமாறு விரித்துரைக்க முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்த போதிலும் மணம் கமழாத மலரைப் போன்றவர்.

## 66.வினைத்தூய்மை

1. துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்

வேண்டிய எல்லாம் தரும்.

பொருள்:

ஒருவனுக்கு வாய்ந்த துணையின் நன்மை ஆக்கத்தைக் கொடுக்கும் செய்யும் வினையின் நன்மை அவன் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும்.

2. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு

நன்றி பயவா வினை.

பொருள்:

புகழையும் அறத்தையும் தாராத (தூய்மை அற்ற) செயல்களை எக்காலத்திலும் ஒருவன் செய்யாமல் விட்டொழிக்க வேண்டும்.

3. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை

ஆஅதும் என்னு மவர்.

பொருள்:

மேன்மேலும் உயர்வோம் என்று விரும்பி முயல்கின்றவர் தம்முடைய புகழ் கெடுவதற்குக் காரணமான செயலைச் செய்யாமல் விடவேண்டும்.

4. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்

நடுக்கற்ற காட்சி யவர்.

பொருள்:

அசைவற்ற தெளிந்த அறிவினையுடையவர், துன்பத்தில் சிக்குண்டாலும் (அத் துன்பத்தைத் தீர்ப்பதற்காகவும்) இழிவான செயல்களைச் செய்யமாட்டார்.

5. எற்றுஎன்று இரங்குவ செய்யற்க செய்வானேல்

மற்றுஅன்ன செய்யாமை நன்று.

பொருள்:

பிறகு நினைந்து வருந்துவதற்குக் காரணமான செயல்களைச் செய்யக்கூடாது. ஒருகால் தவறிச் செய்தாலும், மீண்டும் அத்தன்மையானவற்றைச் செய்யாதிருத்தல் நல்லது.

6. ஈன்றான் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க

சான்றோர் பழிக்கும் வினை.

பொருள்:

பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவுற்ற செயல்களை ஒருவன் செய்யக்கூடாது.

7. பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்

கழிநல் குரவே தலை.

பொருள்:

பழியை மேற்கொண்டு இழிதொழில் செய்து பெறும் செல்வத்தைவிடச் சான்றோர் வினைத்தூய்மை யோடிருந்து பெறும் பொல்லாத வறுமையே சிறந்தது.

8. கடிந்த கடிந்துஓரார் செய்தார்க்கு அவைதாம்

முடிந்தாலும் பீழை தரும்.

பொருள்:

ஆகாதவை என விலக்கப்பட்ட செயல்களை விலக்கி விடாமல் மேற்கொண்டு செய்தவர்க்கு, அச்செயல்கள் நிறைவேறினாலும் துன்பமே கொடுக்கும்.

9. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்

பிற்பயக்கும் நற்பா லவை.

பொருள்:

பிறர் வருந்துமாறு செய்து பெற்ற பொருள் எல்லாம் பெற்றவன் வருந்துமாறு செய்து போய்விடும் நல்வழியில் வந்தவை இழக்கப்பட்டாலும் பிறகு பயன் தரும்.

10. சலத்தால் பொருள்செய்துஏம் ஆர்த்தல் பசுமண்

கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று

பொருள்:

வஞ்சனையான வழியால் பொருளைச் சேர்த்துக் காப்பாற்றுதல், பச்சை மண்கலத்துள் நீரைவிட்டு அதைக் காப்பாற்றி வைத்தாற் போன்றது.

## 67.வினைத்திட்பம்

1. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்

மற்றைய எல்லாம் பிற.

பொருள்:

ஒரு தொழிலின் திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவனுடைய மனத்தின் திட்பமே (உறுதியே ஆகும் மற்றவை எல்லாம் வேறானவை.

2. ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்

ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.

பொருள்:

இடையூறு வருவதற்கு முன்பே நீக்குதல், வந்தபின் தளராமை ஆகிய இந்த இரண்டினது வழியே வினைத் திட்பம் பற்றி ஆராய்ந்தவரின் கொள்கையாம்.

3. கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்

எற்றா விழுமம் தரும்.

பொருள்:

செய்யும் செயலை முடிவில் வெளிப்படும்படியாகச் செய்யும் தகுதியே ஆண்மையாகும் இடையில் வெளிப்பட்டால் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

4. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியஆம்

சொல்லிய வண்ணம் செயல்.

பொருள்:

"இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம்" என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம்˙ சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாம்.

5. வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்

ஊறுஎய்தி உள்ளப் படும்.

பொருள்:

செயல் திறனால் பெருமை பெற்று உயர்ந்தவரின் வினைத் திட்பமானது, நாட்டை ஆளும் அரசனிடத்திலும் எட்டி மதிக்கப்பட்டு விளங்கும்

6. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்

திண்ணியர் ஆகப் பெறின்.

பொருள்:

எண்ணியவர் (எண்ணியபடியே செயல் ஆற்றுவதில்) உறுதியுடையவராக இருக்கப் பெற்றால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.

7. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு

அச்சுஆணி அன்னார் உடைத்து.

பொருள்:

உருளும் பெரிய தேர்க்கு அச்சில் இருந்து தாங்கும் சிறிய ஆணிபோன்றவர்கள் உலகத்தில் உள்ளனர். அவர்களுடைய உருவின் சிறுமையைக் கண்டு இகழக் கூடாது.

8. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது

தூக்கம் கடிந்து செயல்.

பொருள்:

மனம் கலங்காமல் ஆராய்ந்து துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமல் காலந் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

9. துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி

இன்பம் பயக்கும் வினை.

பொருள்:

(முடிவில்) இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும் போது துன்பம் மிக வந்தபோதிலும் துணிவு மேற் கொண்டு செய்து முடிக்க வேண்டும்.

10. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்

வேண்டாரை வேண்டாது உலகு.

பொருள்:

வேறு எத்தகைய உறுதி உடையவராக இருந்தாலும், செய்யும் தொழிலில் உறுதி இல்லாதவரை உலகம் விரும்பிப் போற்றாது.

## 68.வினை செயல் வகை

1. சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு

தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

பொருள்:

ஆராய்ந்து எண்ணுவதற்கு எல்லை துணிவு கொள்வதே ஆகும். அவ்வாறு கொண்ட துணிவு காலந் தாழ்த்து நிற்பது குற்றமாகும்.

2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க

தூங்காது செய்யும் வினை.

பொருள்:

காலந்தாழ்த்துச் செய்யத் தக்கவற்றைக் காலந்தாழ்த்தே செய்யவேண்டும் காலந்தாழ்க்காமல் விரைந்து செய்ய வேண்டிய செயல்களைச் செய்யக் காலந்தாழ்த்தக்கூடாது.

3. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்

செல்லும்வாய் நோக்கிச் செயல்.

பொருள்:

இயலுமிடத்திலெல்லாம் செயலைச் செய்து முடித்தல் நல்லது இயலவில்லையானால் பயன்படும் இடம் நோக்கியாவது செய்யவேண்டும்.

4. வினைபகை என்றஇரண்டின் எச்சம் நினையுங்கால்

தீஎச்சம் போலத் தெறும்.

பொருள்:

செய்யத் தொடங்கிய செயல், கொண்ட பகை என்று இவ்விரண்டின் குறை, ஆராய்ந்து பார்த்தால், தீயின் குறைபோல் தெரியாமல் வளர்ந்து கெடுக்கும்.

5. பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்

இருள்தீர எண்ணிச் செயல்.

பொருள்:

வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

6. முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

பொருள்:

செயலை முடிக்கும் வகையும், வரக்கூடிய இடையூறும், முடிந்தபோது கிடைக்கும் பெரும்பயனும் ஆகியவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

7. செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.

பொருள்:

செயலைச் செய்கின்றவன் செய்யவேண்டியமுறை, அந்தச் செயலின் உண்மையான இயல்பை அறிந்தவனுடைய கருத்தைத் தான் ஏற்றுக் கொள்வதாகும்.

8. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

பொருள்:

ஒரு செயலைச் செய்யும்போது அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக்கொள்ளல்,ஒரு யானையால் மற்றொரு யானையைப் பிடித்தலைப் போன்றது.

9. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்.

பொருள்:

பகைவராக உள்ளவரைப் பொருந்துமாறு சேர்த்துக் கொள்ளல், நண்பர்க்கு உதவியானவற்றைச் செய்தலை விட விரைந்து செய்யத்தக்கதாகும்.

10. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

பொருள்:

வலிமை குறைந்தவர், தம்மைச் சார்ந்துள்ளவர் நடுங்குவதற்காகத் தாம் அஞ்சி, வேண்டியது கிடைக்குமானால் வலிமை மிக்கவரைப் பணிந்து ஏற்றுக் கொ

## 76.பொருள் செயல்வகை

1. பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருள்

அல்லது இல்லை பொருள்.

பொருள்:

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வதாகிய பொருள் அல்லாமல், சிறப்புடைய பொருள் வேறு இல்லை.

2. இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை

எல்லாரும் செய்வர் சிறப்பு.

பொருள்:

பொருள் இல்லாதவரை (வேறு நன்மை உடையவராக இருந்தாலும்) எல்லாரும் இகழ்வர் செல்வரை (வேறு நன்மை இல்லாவிட்டாலும்) எல்லாரும் சிறப்புச் செய்வர்.

3. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருள் அறுக்கும்

எண்ணிய தேயத்துச் சென்று.

பொருள்:

பொருள் என்று சொல்லப்படுகின்ற நந்தாவிளக்கு, நினைத்த இடத்திற்குச் சென்று உள்ள இடையூற்றைக் கெடுக்கும்.

4. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து

தீதுஇன்றி வந்த பொருள்.

பொருள்:

சேர்க்கும் திறம் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டு வந்த செல்வத்தின் ஆக்கத்தைப் பெற்று மகிழாமல் அதைத் தீமையானது என்று நீக்கிவிட வேண்டும்.

5. அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம்

புல்லார் புரள விடல்.

பொருள்:

அருளோடும் அன்போடும் பொருந்தாத வழிகளில் வந்த செல்வத்தின் ஆக்கத்தைப் பெற்று மகிழாமல் அதைத் தீமையானது என்று நீக்கிவிட வேண்டும்.

6. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்

தெறுபொருளும் வேந்தன் பொருள்.

பொருள்:

இறையாக வந்து சேரும் பொருளும், சுங்கமாகக் கொள்ளும் பொருளும், தன் பகைவரை வென்று திறமையாகக் கொள்ளும் பொருளும் அரசனுடைய பொருள்களாகும்.

7. அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள் என்னும்

செல்வச் செவிலியால் உண்டு.

பொருள்:

அன்பினால் பெறப்பட்ட அருள் என்று கூறப்படும் குழந்தை, பொருள் என்று கூறப்படும் செல்வமுள்ள செவிலித் தாயால் வளர்வதாகும்.

8. குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று

உண்டாகச் செய்வான் வினை.

பொருள்:

தன் கைப்பொருள் ஒன்று தன்னிடம் இருக்க அதைக் கொண்டு ஒருவன் செயல் செய்தல், மலையின்மேல் ஏறி, யானைப் போரைக் கண்டாற் போன்றது.

9. செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்

எஃகுஅதனின் கூரியது இல்.

பொருள்:

ஒருவன் பொருளை ஈட்டவேண்டும் அவனுடைய பகைவரின் செருக்கைக் கெடுக்கவல்ல வாள் அதைவிடக் கூர்மையானது வேறு இல்லை.

10. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்

ஏனை இரண்டும் ஒருங்கு.

பொருள்:

சிறந்ததாகிய பொருளை மிகுதியாக ஈட்டியவர்க்கு, மற்ற அறமும் இன்பமுமாகிய இரண்டும் ஒருசேரக் கை கூடும் எளிய பொருளாகும்.

## 79.நட்பு

1. செயற்குஅரிய யாவுள நட்பின்: அதுபோல் வினைக்கு

அரிய யாவுள காப்பு?

பொருள்:

நட்பைப்போல் செய்துகொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன? அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன?

2. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்

பின்நீர பேதையார் நட்பு.

பொருள்:

அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்துவருதல் போன்ற தன்மையுடையன் அறிவில்லாதவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின்செல்லுதல் போன்ற தன்மையுடையன.

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

பண்புடை யாளர் தொடர்பு.

பொருள்:

பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருதல், நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றதாகும்.

4. நகுதல் பொருட்டன்று நட்டல்: மிகுதிக்கண்

மேற்சென்று இடித்தல் பொருட்டு.

பொருள்:

நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் பொருட்டு அன்று நண்பர் நெறி கடந்து சொல்லும்போது முற்பட்டுச் சென்று இடித்துரைப்பதற்காகும்.

5. புணர்ச்சி பழகுதல் வேண்டா: உணர்ச்சிதான்

நட்புஆம் கிழமை தரும்.

பொருள்:

நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும்.

6. முகம்நக நட்பது நட்பன்று: நெஞ்சத்து

அகம்நக நட்பது நட்பு.

பொருள்:

முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்புகொண்டு நட்புச் செய்வதே நட்பு ஆகும்.

7. அழிவின் அவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்

அல்லல் உழப்பதாம் நட்பு.

பொருள்:

அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நீக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவு வந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே நட்பாகும்.

8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதுஆம் நட்பு.

பொருள்:

உடை நெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக் காப்பது போல், (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்பொழுதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு.

9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி

ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

பொருள்:

நட்புக்குச் சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும்போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

10. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று

புனையினும் புல்லென்னும் நட்பு.

பொருள்:

“இவர், எமக்கு இத்தன்மையானவர், யாம் இவர்க்கு இத்தன்மையுடையேம்“ என்று புனைந்துரைத்தாலும் நட்புச் சிறப்பிழந்துவிடும்.

## 80.நட்பாராய்தல்

1. நாடாது நட்டலின் கேடுஇல்லை நட்டபின்

   வீடுஇல்லை நட்பாள் பவர்க்கு.

பொருள்:

நட்புச் செய்தபிறகு நட்பை உடையவர்க்கு அதிலிருந்து விடுதலை இல்லை: ஆகையால் ஆராயாமல் நட்புச் செய்வதைப் போல் கெடுதியானது வேறு இல்லை.

2. ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை

தான்சாம் துயரம் தரும்.

பொருள்:

ஆராய்ந்து ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவனுடைய நட்பு, இறுதியில் தான் சாவதற்குக் காரணமான துயரத்தை உண்டாக்கிவிடும்.

3. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா

இனனும் அறிந்தியாக்க நட்பு.

பொருள்:

ஒருவனுடைய குணத்தையும், குடிப்பிறப்பையும், குற்றத்தையும், குறையாத இனத்தாரின் இயல்பையும் அறிந்து அவனோடு நட்புக் கொள்ளவேண்டும்.

4. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்

   கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

பொருள்:

உயர்ந்த குடியில் பிறந்து, தன்னிடத்தில் வரக்கூடிய பழிக்கு நாணுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நட்புக் கொள்ளவேண்டும்.

5. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய

   வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.

பொருள்:

நன்மையில்லாத செயலைக் கண்டபோது வருந்தும் படியாக இடித்துச் சொல்லி, உலக நடையை அறிய வல்லவரின் நட்பை ஆராய்ந்து கொள்ளவேண்டும்.

6. கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

பொருள்:

கேடு வந்தபோதும் ஒருவகை நன்மை உண்டு அக்கேடு ஒருவனுடைய நண்பரின் இயல்புகளை நீட்டி அளந்து பார்ப்பதொரு கோலாகும்.

7. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

பொருள்:

ஒருவனுக்கு ஊதியம் என்று சொல்லப்படுவது, அறிவில்லாதவருடன் செய்துகொண்ட நட்பிலிருந்து நீங்கி அவரைக் கைவிடுதலாகும்,

8. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லல்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு.

பொருள்:

ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணாமலிருக்கவேண்டும் அதுபோல் துன்பம் வந்த போது கைவிடுகின்றவரின் நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும்.

9. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

பொருள்:

கேடு வரும் காலத்தில் கைவிட்டு ஒதுங்குகின்றவரின் நட்பு, எமன் கொல்லும் காலத்தில் நினைத்தாலும் நினைத்த உள்ளத்தை வருத்தும்.

10. மருவுக மாசற்றார் கேண்மை:ஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

பொருள்:

குற்றமற்றவருடைய நட்பைக் கொள்ளவேண்டும் ஒத்த பண்பு இல்லாதவருடைய நட்பை ஒன்றைக் கொடுத்தாவது கைவிடவேண்டும்.

## 81.பழைமை

1. பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்

   கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

பொருள்:

பழைமை என்று சொல்லப்படுவது எது என்று வினவினால் அது பழகியவர் உரிமைபற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பாகும்.

2. நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றுஅதற்கு

   உப்புஆதல் சான்றோர் கடன்.

பொருள்:

நட்பிற்கு உறுப்பாவது நண்பருடைய உரிமைச் செயலாகும் அந்த உரிமைச் செயலுக்கு

உடன்பட்டவராதல் சான்றோரின் கடமையாகும்.

3. பழகிய நட்புஎவன் செய்யும் கெழுதகைமை

   செய்தாங்கு அமையாக் கடை?

பொருள்:

பழகியவர் உரிமைபற்றிச் செய்யும் செயலைத் தாம் செய்தது போலவே கருதி உடன்படாவிட்டால் அவரோடு தாம் பழகிய நட்பு என்ன பயன் தரும்?

4. விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையால்

   கேளாது நட்டார் செயின்.

பொருள்:

உரிமையால் கேளாமலே நண்பர் ஒன்றைச் செய்தால், அந்த உரிமையைப் போற்றி விரும்பும் தன்மையோடு அச்செயலையும் விரும்பி உடன்பட்டிருப்பர் அறிஞர்.

5. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க

   நோதக்க நட்டார் செயின்.

பொருள்:

வருந்தத்தக்க செயல்களை நண்பர் செய்தால் அதற்குக் காரணம், அறியாமை என்றாவது மிகுந்த உரிமை என்றாவது உணரவேண்டும்.

6. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்

தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

பொருள்:

உரிமைவாழ்வின் எல்லையில் நின்றவர், தமக்கு அழிவு நேர்ந்தவிடத்திலும் பழைமையாய் உறவுகொண்டு நின்றவரின் தொடர்பைக் கைவிடமாட்டார்.

7. அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்

வழிவந்த கேண்மை யவர்.

பொருள்:

அன்புடன் தொன்றுதொட்டு வந்த உறவை உடையவர், அழிவு தரும் செயல்களைப் பழகியவர் செய்த போதிலும் தம் அன்பு நீங்காமலிருப்பார்.

8. கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு

நாள்இழுக்கம் நட்டார் செயின்.

பொருள்:

பழகிய நண்பர் செய்த தவறு பற்றிப் பிறர் சொன்னாலும் கேளாமலிருக்கும் உரிமை வல்லவர்க்கு, அந் நண்பர் தவறு செய்வாரானால் அது பயனுள்ள நாளாகும்.

9. கெடாஅஅ வழிவந்த கேண்மையார் கேண்மை

விடாஅர் விழையும் உலகு.

பொருள்:

உரிமை கெடாமல் தொன்றுதொட்டு வந்த உறவு உடையவரின் தொடர்பைக் கைவிடாதவரை உலகம் விரும்பிப் போற்றும்.

10. விழையார் விழையப் படுப பழையார்கண்

பண்பின் தலைப்பிரியா தார்.

பொருள்:

(தவறு செய்தபோதிலும்) பழகிய நண்பரிடத்தில் தம் உரிமைப் பண்பிலிருந்து மாறாதவர், தம் பகைவராலும் விரும்பப்படுதற்குரிய சிறப்பை அடைவர்.

## 82.தீ நட்பு

1. பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை

   பெருகலின் குன்றல் இனிது.

பொருள்:

அன்பு மிகுதியால் பருகுவார்போல் தோன்றினாலும் நற்பண்பு இல்லாதவரின் நட்பு, வளர்ந்து பெருகுவதைவிடத் தேய்ந்து குறைவது நல்லது.

2. உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை

   பெறினும் இழப்பினும் என்?

பொருள்:

தமக்குப் பயன் உள்ளபோது நட்புச் செய்து, பயன் இல்லாதபோது நீங்கிவிடும் தகுதியில்லாதவரின் நட்பைப் பெற்றாலும் என்ன? இழந்தாலும் என்ன?

3. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது

   கொள்வாரும் கள்வரும் நேர்.

பொருள்:

கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், அன்பைக் கொள்ளாமல் பெறுகின்ற பொருளைக் கொள்ளும் விலைமகளிரும், கள்வரும் ஒரு நிகரானவர்.

4. அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்

   தமரின் தனிமை தலை.

பொருள்:

போர் வந்தபோது களத்தில் தள்ளிவிட்டு ஓடும் அறிவில்லாத குதிரை போன்றவரின் உறவைவிட, ஒரு நட்பும் இல்லாமல் தனித்திருத்தலே சிறந்தது.

5. செய்துஏமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை

   எய்தலின் எய்தாமை நன்று.

பொருள்:

காவல் செய்து வைத்தாலும் காவல் ஆகாத கீழ்மக்களின் தீய நட்பு, ஒருவனுக்கு ஏற்படுவதைவிட ஏற்படாமலிருப்பதே நன்மையாகும்.

6. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுஉடையார்

ஏதின்மை கோடி உறும்.

பொருள்:

அறிவில்லாதவனுடைய மிகப் பொருந்திய நட்பைவிட அறிவுடையவரின் நட்பில்லாத தன்மை கோடி மடங்கு நன்மை தருவதாகும்

7. நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்

பத்துஅடுத்த கோடி உறும்.

பொருள்:

(அகத்தில் அன்பு இல்லாமல் புறத்தில்) நகைக்கும் தன்மை உடையவரின் நட்பைவிட, பகைவரால் வருவன பத்துக்கோடி மடங்கு நன்மையாகும்.

8. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை

சொல்ஆடார் சோர விடல்.

பொருள்:

முடியும் செயலையும் முடியாதபடி செய்து கெடுப்பவரின் உறவை, அவர் அறியுமாறு ஒன்றும் சொல்லாமலே தளரச் செய்து கைவிட வேண்டும்.

9. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு

சொல்வேறு பட்டார் தொடர்பு.

பொருள்:

செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவரின் நட்பு, ஒருவனுக்குக் கனவிலும் துன்பம் தருவதாகும்.

10. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ

மன்றில் பழிப்பார் தொடர்பு.

பொருள்:

தனியே வீட்டில் உள்ளபோது பொருந்தியிருந்து, பலர் கூடிய மன்றத்தில் பழித்துப் பேசுவோரின் நட்பை எவ்வளவு சிறிய அளவிலும் அணுகாமல் விடவேண்டும்.

## 83.கூடா நட்பு

1. சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை

நேரா நிரந்தவர் நட்பு.

பொருள்:

அகத்தே பொருந்தாமல் புறத்தில் பொருந்தி நடப்பவரின் நட்பு, தக்க இடம் கண்டபோது எறிவதற்கு உரிய பட்டடையாகும்.

2. இனம்போன்று இனம்அல்லார் கேண்மை மகளிர்

மனம்போல வேறு படும்.

பொருள்:

இனம் போலவே இருந்து உண்மையில் இனம் அல்லாதவரின் நட்பு, பொதுமகளிரின் மனம்போல உள்ளொன்று புறமொன்றாக வேறுபட்டு நிற்கும்.

3. பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்

ஆகுதல் மாணார்க்கு அரிது.

பொருள்:

பல நல்ல நூல்களைக் கற்றுத் தேர்ந்தபோதிலும், அவற்றின் பயனாக நல்ல மனம் உடையவராகப் பழகுதல், (உள்ளன்பினால்) மாட்சியடையாதவர்க்கு இல்லை.

4. முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா

வஞ்சரை அஞ்சப் படும்.

பொருள்:

முகத்தால் இனிமையாகச் சிரித்துப் பழகி அகத்தில் தீமை கொண்டுள்ள வஞ்சகருடன் நட்புக் கொள்வதற்கு அஞ்சவேண்டும்.

5. மனத்தின் அமையா தவரை எனைத்துஒன்றும்

சொல்லினால் தேறற்பாற்று அன்று.

பொருள்:

மனத்தால் தம்மொடு பொருந்தாமல் பழகுகின்றவரை அவர் கூறுகின்ற சொல்லைக் கொண்டு எத்தகைய ஒரு செயலிலும் நம்பித் தெளியக்கூடாது.

6. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்

ஒல்லை உணரப் படும்.

பொருள்:

நண்பர்போல் நன்மையானவற்றைச் சொன்ன போதிலும் பகைமை கொண்டவர் சொல்லும் சொற்களின் உண்மைத் தன்மை விரையில் உணரப்படும்.

7. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்

தீங்கு குறித்தமை யான்.

பொருள்:

வில்லின் வணக்கம் வணக்கமாக இருந்தாலும் தீங்கு செய்தலைக் குறித்தமையால், பகைவரிடத்திலும் அவருடைய சொல்லின் வணக்கத்தை நன்மையாகக் கொள்ளக்கூடாது.

8. தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்

அழுதகண் ணீரும் அனைத்து.

பொருள்:

பகைவர் வணங்கித் தொழுத கையினுள்ளும் கொலைக் கருவி மறைந்திருக்கும் பகைவர் அழுது சொரிந்த கண்ணீரும் அத்தன்மையானதே.

9. மிகச்செய்து தம்எள் ளு வாரை நகச்செய்து

நட்பினுள் சாப்புல்லல் பாற்று.

பொருள்:

புறத்தே மிகுதியாக நட்புத் தோன்றச் செய்து அகத்தில் இகழ்கின்றவரைத், தாமும் அந் நட்பில் நகைத்து மகிழுமாறு செய்து அத்தொடர்பு சாகுமாறு நடக்கவேண்டும்.

10. பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு

அகம்நட்பு ஒரீஇ விடல்.

பொருள்:

பகைவர் நண்பராகும் காலம் வரும்போது முகத்தளவில் நட்புக்கொண்டு அகத்தில் நட்பு நீங்கி வாய்ப்புக் கிடைத்தபோது அதையும் விடவேண்டும்.

## 121.நினைந்தவர் புலம்பல்

1. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்

கள்ளினும் காமம் இனிது.

பொருள்:

நினைந்தாலும் தீராத பெரிய மகிழ்ச்சியைச் செய்தலால் (உண்டபோது மட்டும் மகிழ்ச்சி தரும்)

கள்ளைவிடக் காமம் இன்பமானதாகும்.

2. எனைத்துஒன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்

நினைப்ப வருவதுஒன்று இல்

பொருள்:

தாம் விரும்புகின்ற காதலர் தம்மை நினைத்தலும் பிரிவால் வரக்கூடிய துன்பம் இல்லாமற் போகின்றது: அதனால் காமம் எவ்வளவாயினும் இன்பம் தருவதே ஆகும்.

3. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்

சினைப்பது போன்று கெடும்.

பொருள்:

தும்மல் வருவதுபோலிருந்து வாராமல் அடங்குகின்றதே! என் காதலர் என்னை நினைப்பவர்போலிருந்து நினையாமல் விடுகின்றாரோ?

4. யாமும் உளேம்கொல் அவர்நெஞ்சத்து எம்நெஞ்சத்து

ஓஒ உளரே அவர்.

பொருள்:

எம்முடைய நெஞ்சில் காதலராகிய அவர் இருக்கின்றாரே! (அது போலவே) யாமும் அவருடைய நெஞ்சத்தில் நீங்காமல் இருக்கின்றோமோ?

5. தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்

எம்நெஞ்சத்து ஓவா வரல்?

பொருள்:

தம்முடைய நெஞ்சில் எம்மை வரவிடாது காவல் கொண்ட காதலர், எம்முடைய நெஞ்சில் தாம் ஓயாமல் வருவதைப்பற்றி நாணமாட்டாரோ!

6. மற்றுயான் என்உளேன் மன்னோ அவரொடுயான்

உற்றநாள் உள்ள உளேன்.

பொருள்:

காதலராகிய அவரோடு யான் பொருந்தியிருந்த நாட்களை நினைத்துக்கொள்வதால்தான் உயிரோடிருக்கின்றேன் வேறு எதனால் உயிர்வாழ்கின்றேன்?

7. மறப்பின் எவன்ஆவன் மற்கொல்? மறப்புஅறியேன்

உள்ளினும் உள்ளம் சுடும்.

பொருள்:

(காதலரை) மறந்தறியாமல் நினைத்தாலும் உள்ளத்தைப் பிரிவுத் துன்பம் சுடுகின்றதே! நினைக்காமல் மறந்துவிட்டால் என்ன ஆவேனோ?

8. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்துஅன்றோ

காதலர் செய்யும் சிறப்பு !

பொருள்:

காதலரை எவ்வளவு மிகுதியாக நினைத்தாலும் அவர் என்மேல் சினங் கொள்ளார் காதலர் செய்யும் சிறந்த உதவி அத்தன்மையானது அன்றோ!

9. விளியும்என் இன்னுயிர் வேறல்லம் என்பார்

அளிஇன்மை ஆற்ற நினைந்து.

பொருள்:

நாம் இருவரும் வேறு அல்லேம் என்று அடிக்கடி சொல்லும் அவர் இப்போது அன்பு இல்லாதிருத்தலை மிக நினைந்து என் இனிய உயிர் அழிகின்றது.

10. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்

படாஅதி வாழி மதி !

பொருள்:

திங்களே! பிரியாமலிருந்து இறுதியில் பிரிந்து சென்ற காதலரை என் கண்ணால் தேடிக் காணும்படியாக நீ மறைந்து விடாமல் இருப்பா

## 125.நெஞ்சொடு கிளத்தல்

1. நினைத்துஒன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்துஒன்றும்

   எவ்வநோய் தீர்க்கும் மருந்து ?

பொருள்:

நெஞ்சே! (காதலால் வளர்ந்த) இத் துன்பநோயைத் தீர்க்கும் மருந்து ஏதாவது ஒன்றை நீ நினைத்துப்பார்த்து எனக்குச் சொல்லமாட்டாயோ

2. காதல் அவர்இலர் ஆகநீ நோவது

   பேதமை வாழிஎன் நெஞ்சு.

பொருள்:

என் நெஞ்சே! வாழ்க! அவர் நம்மிடம் காதல் இல்லாதவராக இருக்க, நீ மட்டும் அவரை நினைந்து வருந்துவதும் உன் அறியாமையே!

3. இருந்துஉள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்

   பைதல்நோய் செய்தார்கண் இல்.

பொருள்:

நெஞ்சே(என்னுடன்)இருந்து அவரை நினைந்து வருந்துவது ஏன்? இந்தத் துன்பநோயை உண்டாக்கியவரிடம் இவ்வாறு அன்பு கொண்டு நினைக்கும் தன்மை இல்லையே!

4. கண்ணும் கொளச்சேறி நெஞ்சே! இவைஎன்னைத்

   தின்னும் அவர்க்காணல் உற்று.

பொருள்:

நெஞ்சே! நீ அவரிடம் செல்லும் போது என் கண்களையும் உடன் கொண்டு செல்வாயாக் அவரைக் காண வேண்டும் என்று இவை என்னைப் பிடுங்கித் தின்கின்றன.

5. செற்றா ரெனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்

   உற்றால் உறாஅ தவர் ?

பொருள்:

நெஞ்சே! யாம் விரும்பி நாடினாலும் எம்மை நாடாத அவர் நம்மை வெறுத்துவிட்டார் என்று எண்ணிக் கை விட முடியுமோ?

6. கலந்துஉணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துஉணராய்

பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு.

பொருள்:

என் நெஞ்சே! ஊடியபோது கூடி ஊடல் உணர்த்த வல்ல காதலரைக் கண்டபோது நீ பிணங்கி உணரமாட்டாய்: பொய்யான சினங்கொண்டு காய்கின்றாய்.

7. காமம் விடுஒன்றோ நாண்விடு நல்நெஞ்சே

யானோ பொறேன்இவ் இரண்டு.

பொருள்:

நல்ல நெஞ்சே! ஒன்று காமத்தை விட்டு விடு அல்லது நாணத்தை விட்டுவிடு இந்த இரண்டையும் பொறுத்துக் கொண்டிருக்க என்னால் முடியாது

8. பரிந்துஅவர் நல்கார்என்று ஏங்கிப் பிரிந்தவர்

பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு

பொருள்:

என் நெஞ்சே! பிரிவுத் துன்பத்தால் வருத்தி அவர் வந்து அன்பு செய்யவில்லையே என்று ஏங்கிப்பிரிந்தவரின் பின் செல்கின்றாய்: நீ பேதை.

9. உள்ளத்தார் காத லவர்ஆக உள்ளிநீ

யாருழைச் சேறிஎன் நெஞ்சு?

பொருள்:

என் நெஞ்சே! காதலர் உன் உள்ளததில் உள்ளவராக இருக்கும்போது நீ அவரை நினைத்து யாரிடம் தேடிச் செல்கின்றாய்?

10. துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா

இன்னும் இழத்தும் கவின்.

பொருள்:

நம்மோடு பொருந்தியிருக்காமல் கைவிட்டுச் சென்ற காதலரை நெஞ்சில் வைத்திருக்கும்போது, இன்னும் மெலிந்து அழகை இழந்து வருகின்றோம்.

## 132.புலவி நுணுக்கம்

1. பெண்இயலார் எல்லோரும் கண்ணின் பொதுஉண்பர்

   நண்ணேன் பரத்தநின் மார்பு.

பொருள்:

பரத்தமை உடையாய் பெண்தன்மை உடையவர் எல்லாரும் தம்தம் கண்களால் பொதுப் பொருளாகக் கொண்டு நுகர்கின்றார்கள் ஆகையால் உன் மார்பைப் பொருந்தேன்.

2. ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை

   நீடுவாழ்க என்பாக்கு அறிந்து.

பொருள்:

காதலரோடு ஊடல் கொண்டிருந்தோமாக, யாம் தம்மை நெடுங்காலம் வாழ்க என்று வாய்திறந்து சொல்லுவோம் என நினைத்து அவர் தும்மினார்.

3. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்

   காட்டிய சூடினீர் என்று.

பொருள்:

கிளைகளில் மலர்ந்த மலர்களைச் சூடினாலும் "நீர் இந்த அழகை யாரோ ஒறுத்திக்குக் காட்டுவதற்காகச் சூடினீர்" என்று சினம் கொள்வாள்.

4. யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்

   யாரினும் யாரினும் என்று.

பொருள்:

"யாரையும்விட நாம் மிக்க காதல் கொண்டிருக்கிறோம் என்று சொன்னேனாக, யாரைவிட? யாரைவிட? என்று கேட்டு ஊடல் கொண்டாள்.

5. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்

   கண்நிறை நீர்கொண் டனள்.

பொருள்:

“இப்பிறப்பில் யாம் பிரியமாட்டோம்“ என்று காதலியிடம் சொன்னேனாக, இனி வரும் பிறப்பில் பிரிவதாக உணர்ந்து கண் நிறையக் கண்ணீர் கொண்டாள்.

6. உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்

புல்லாள் புலத்தக் கனள்.

பொருள்:

நினைத்தேன் என்று கூறினேன் நினைப்புக்கு முன் மறப்பு உண்டு அன்றோ? ஏன் மறந்தீர்? என்று என்னைத் தழுவாமல் ஊடினாள்.

7. வழுத்தினாள் தும்மினே னாக அழித்துஅழுதாள்

யார்உள்ளித் தும்மினீர் என்று.

பொருள்:

யான் தும்மினேனாக அவள் ழூநூறாண்டு என வாழ்த்தினாள் உடனே அதைவிட்டு யார் நினைத்ததால் தும்மினீர்? என்று கேட்டு அழுதாள்.

8. தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்

எம்மை மறைத்திரோ என்று.

பொருள்:

அவளுடைய ஊடலுக்கு அஞ்சி யான் தும்மலை அடக்கிக் கொள்ள உம்மவர் உம்மை நினைப்பதை எமக்குத் தெரியாமல் மறைக்கின்றநீரோ என்று அழுதாள்.

9. தன்னை உணரர்த்தினும் காயும் பிறர்க்குநீர்

இந்நீரர் ஆகுதிர் என்று

பொருள்:

ஊடியிருந்போது அவளை ஊடல் உணர்த்தி மகிழ்வித்தாலும், நீர் மற்ற மகளிர்க்கும் இத்தன்மையானவராக ஆவீர் என்று சொல்லிச் சினம் கொள்வாள்.

10. நினைத்துஇருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்

யார்உள்ளி நோக்கினீர் என்று.

பொருள்:

அவளுடைய அழகை நினைத்து அமைதியாக இருந்து நோக்கினாலும், நீர் யாரை நினைத்து ஒப்புமையாக எல்லாம் பார்க்கின்றீர்? என்று சினம் கொள்வாள்.

# அலகு-4 நாலடியார் (சமணமுனிவர்கள்)

**நோக்கம்:**

- **திருக்குறளை அடியொற்றி இயற்றப்பட்ட அற இலக்கியமாக நாலடியார் விளங்குகிறது.**
- **தனிமனிதன் குடும்பம் சமுதாயம் என்ற நிலைகளில் சிறந்த வாழ்க்கைக்கு வழிகாட்டும் அற இலக்கியமாக திகழ்கிறது**
- **இலக்கியச் சுவையிலும் பழமொழிகளைக் கையாள்வதிலும் எடுத்துக் கூறும் முறையிலும் நாலடியார் சிறந்து விளங்குகிறது.**
- **இடைக்கால மக்களின் பழக்கவழக்கங்கள் பற்றி தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.**
- **துறவறம் பற்றியும் இல்லறம் பற்றியும் நாலடியாரில்கருத்துக்கள் இடம் பெற்றுள்ள**

## நட்பிற் பிழைபொறுத்தல்

பாடல் : 221

நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை

அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்

நெல்லுக் குமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு

புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

பொருளுரை:

(யாவரும் விரும்பும்) நெல்லுக்கு உமியாகிய குற்றம் உண்டு தண்ணீருக்கு நுரையாகிய குற்றம் உண்டு பூவிற்கும் புற விதழாகிய குற்றம் உண்டு ஆதலால் “இவர் நல்லவர்” என்று மிகவும் விரும்பி நண்பராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர், பின் கெட்ட குணமுடையவராகத் தோன்றினாலும், அவர்தம் குற்றங்களைப் பிறர் அறியாமல் மறைத்து, அவரை நட்பினராகவே மதிக்க வேண்டும்.

பாடல் : 222

செறுத்தோறு உடைப்பினும் செம்புனலோடு ஊடார்

மறுத்தும் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்

வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே

தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

பொருளுரை:

தண்ணீர், அடைக்குந்தோறும் கரையினை உடைத்துக் கொண்டேயிருப்பினும், அந்த நல்ல நீருடன் யாரும் சினம் கொள்ளார் அதனை விரும்பி வாழ்பவர் மீண்டும் அந்த நீரை அணை கட்டித் தடுப்பர். அதுபோலத் தாம் விரும்பி நண்பராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர் மனம் வெறுக்கத் தக்க பிழைகளைச் செய்தாலும் சான்றோர் அவற்றைப் பொறுத்துக்கொள்வர்.

பாடல் : 223

இறப்பவே தீய செயினும் தம் நட்டார்

பொறுத்தல் தகுவதொன்று அன்றோ - நிறக்கோங்கு

உருவவண்டு ஆர்க்கும் உயர்வரை நாட!

ஒருவர் பொறைஇருவர் நட்பு.

பொருளுரை:

பொன்னிறமான கோங்க மலரில் அழகிய வண்டுகள் ஆரவாரிக்கும் உயர்ந்த மலைகள் உள்ள நல்ல நாட்டுக்கு அரசனே! ஒருவனுடைய பொறுமையினால் இருவருடைய நட்பு வளரும். ஆதலால் நண்பர் மிகவும் தீயனவற்றைச் செய்தாலும், அவற்றைப் பொறுத்துக் கொள்ளுதல் தகுதியான ஒரு செயல் அல்லவா?

பாடல் : 224

மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம்

கடுவிசை நாவாய் கரையலைக்கும் சேர்ப்ப!

விடுதற்கு அரியார் இயல்பிலரேல் நெஞ்சம்

சுடுதற்கு மூட்டிய தீ.

பொருளுரை:

மடிந்து விழும் அலைகள் கொணர்ந்து குவித்த ஒளி பொருந்திய முத்துக்களை, மிகுந்த வேகமுள்ள கப்பல்கள் கரையிலே அலையச் செய்கின்ற கடற்கரையையுடைய வேந்தனே! கை விடற்கரிய நண்பர்கள் நற்குணம் இல்லாதவரானால் அவர்கள் நம் நெஞ்சைச் சுடுவதற்காக நம்மாலேயே மூட்டப்பட்ட தீயாவர். (கைவிடற்கரிய நண்பர்கள் மனத்திற்கு வருத்தம் தரும் செயல்களைச் செய்யாதிருக்க வேண்டும் என்பது கருத்து).

பாடல் : 225

இன்னா செயினும் விடற்பாலர் அல்லாரைப்

பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும் - பொன்னொடு

நல்லிற் சிதைத்த தீ நாடொறும் நாடித்தம்

இல்லத்தில் ஆக்குத லால்.

பொருளுரை:

பொன்னுடன் நல்ல வீட்டையும் சுட்டெரிக்கும் நெருப்பை (உணவு படைக்க உதவும் தேவை கருதி) ஒவ்வொரு நாளும் வீட்டில் அதனை உண்டாகிப் போற்றி வருகிறோம். அதுபோல, இடையிடையே துன்பங்களைச் செய்தாலும் கைவிடற்கரிய நண்பர்களைப் பொன்போல் நினைத்து மேலாகக் கொள்ள வேண்டும்.

பாடல் : 226

இன்னா செயினும் விடுதற்கு அரியாரைத்

துன்னாத் துறத்தல் தகுவதோ - துன்னருஞ்சீர்

விண்குத்து நீள்வரை வெற்ப! களைபவோ

கண்குத்திற்று என்றுதம் கை.

பொருளுரை:

அடைதற்கரிய வானளவு உயர்ந்த மலைகளையுடைய நாட்டுக்கு அரசனே! கண்ணைக் குத்தி விட்டது என்பதற்காக யாராவது தன் கைகளில் உள்ள விரல்களை வெட்டி எறிவார்களா? அதுபோல, துன்பங்களைச் செய்தாலும் அரிய நண்பர்களை விலக்கி விடுதல் தகுதியாகுமோ? ஆகாது.

பாடல் : 227

இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினும்

கலந்து பழிகாணார் சான்றோர் - கலந்தபின்

தீமை எடுத்துரைக்கும் திண்ணறி வில்லாதார்

தாமும் அவரின் கடை.

பொருளுரை:

விளங்கும் நீர்மிக்க குளிர்ந்த கடற்கரையையுடைய நாட்டின் அரசனே! நண்பர் தீயனவற்றைச் செய்தாலும், சான்றோர், அவர் செய்த பிழையை மனத்தில் கொள்ளார். நட்புச் செய்தபின் அவர் குற்றத்தை எடுத்துரைக்கும் திடமான அறிவில்லாதவர் தீமை செய்யும் நண்பரைவிடத் தாழ்ந்தவராவர்.

பாடல் : 228

ஏதிலார் செய்தது இறப்பவே தீதெனினும்

நோதக்கது என்னுண்டாம் நோக்குங்கால்! - காதல்

கழுமியார் செய்த கறங்கருவி நாட!

விழுமிதாம் நெஞ்சத்துள் நின்று.

பொருளுரை:

ஒலிக்கும் மலை அருவிகளையுடைய நாட்டுக்கு அரசனே! அயலார் செய்த தீங்கு மிகவும் கொடியதானாலும் இ∴து ஊழால் நேர்ந்தது என்று நோக்குங்கால் அதில் வருந்துவதற்கு என்ன இருக்கிறது? அங்ஙனமிருக்க, அன்பு மிகுந்தவர் உரிமையால் செய்த தீமை நெஞ்சில் நின்று சிறந்ததாகிவிடும். (அயலார் செய்ததை ஆராயுங்கால், வெறுக்கத் தகாததானால் அன்பர் செய்தது பிரியமானதாகும் என்பது கருத்து.

பாடல் : 229

தமரென்று தாம்கொள்ளப் பட்டவர் தம்மைத்

தமரன்மை தாமறிந்தார் ஆயின், - அவரைத்

தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை

தம்முள் அடக்கிக் கொளல்.

பொருளுரை:

தம் நண்பர் என்று தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் தம்மை, தம் நண்பராதற்குரிய தன்மையில்லாதவர் என்று பிறகு உணர்ந்தார்களாயின், அப்போதும் அவர்களைத் தம் நண்பர்களைவிட மேலாகக் கருதி, நண்பராதற்குரிய பண்பு இல்லாத அவரது தன்மையைத் தம் மனத்திற்குள்ளேயே அடக்கிக் கொள்ள வேண்டும். (அப்படிக் குற்றம் மறைத்து அவர்களை மதித்தால் அவர்கள் பிழை உணர்ந்து வருந்தித் திருந்துவர் என்பது கருத்து).

பாடல் : 230

குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை

நட்டபின் நாடித் திரிவேனேல் - நட்டான்

மறைகாவா விட்டவன் செல்வழிச் செல்க

அறைகடல்சூழ் வையம் நக.

பொருளுரை:

ஒருவனை மனம் விரும்பி நண்பனாக ஏற்ற பிறகு, அவனது குற்றத்தையும் ஆராய்ந்து திரிவேனாகில், ஒலி கடல் சூழ் உலகத்தார் என்னைப் பார்த்து இகழ்ந்து சிரிக்குமாறு நான்,

நண்பனின் குற்றத்தை மறைக்காது வெளிப்படையாகத் தூற்றுபவன் செல்லும் நரகத்தைச் சென்றடைவேனாக.

# இனியவை நாற்பது

## (பூதஞ்சேந்தனார்)

**நோக்கம்:**

- **இனியவை நாற்பதில் பல ஒழுக்க நெறிகள் கூறப்பட்டுள்ளன.**
- **கல்வி, அறச்செயல்கள், நட்பு ஆகியவை எவ்வகையில் இனிமை பயப்பவனாக உள்ளன.என்பதனை, இனியவை நாற்பது கூறுகிறது.**
- **கணவன் மனைவிக்கு இடையிலான ஒற்றுமையை வாயிலாக கிடைக்கும் இன்பத்தை பற்றி கூறுகிறது.**
- **அக்கால மக்களின் வாழ்வியல் முறைகளை அறிந்து கொள்ள முடிகிறது.**
- **வாழ்க்கைக்கு வேண்டிய இனிய அறக்கருத்துக்களைச் சுவைபட கூறுகிறது.**

பாடல் - 01

பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகஇனிதே

நற்சலையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே

முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே

தெற்றவும் மேலாயார்ச் சேர்வு.

விளக்கம்:

பிச்சையெடுத்தாவது கற்பது இனிது. அப்படி கற்ற கல்வி நல்ல சபையில் உதவுவது மிக இனிது. முத்தையொக்கும் மகளிரது வாய்ச்சொல் இனிது. அதுபோல பெரியோர்களைத் துணையாகக் கொள்ளுதல் இனிது.

பாடல் - 02

உடையான் வழக்கினி தொப்ப முடிந்தால்

மனைவாழ்க்கை முன் இனிது மாணாதா மாயின்

நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்

தலையாகத் தான்இனிது நன்கு.

விளக்கம்:

பொருள் உடையவனது ஈகை இனிது. மனைவியுள்ளமும் கணவன் உள்ளமும் ஒன்றுபடக் கூடுமாயின் மனை வாழ்க்கை இனிது. உலக வாழ்க்கை நிலையில்லாதது என்று ஆராய்ந்துணர்ந்து முற்றும் துறத்தல் இவை அனைத்திலும் மிக இனிது.

பாடல் - 03

ஏவது மாறா இளங்கிளைமை முன்இனிதே

நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே

ஏருடையான் வேளாண்மை தானினிது ஆங்கினிதே

தேரிற்கோள் நட்புத் திசைக்கு.

விளக்கம்:

சொன்ன வேலைகளை மாற்றமில்லாமல் செய்யும் வேலைக்காரர்களைக் கொண்டிருப்பது இனிதாகும். குற்றங்களில் ஈடுபடாமல் கற்றல் மிக இனிதாகும். ஏரினையும் உழவுமாடுகளையும் சொந்தமாக வைத்திருப்பவன் விவசாயம் செய்வது இனிது. அதுபோல ஆராயின் செல்லுந்திசையில் நட்புக்கொள்ளுதல் இனிது.

பாடல் - 04

யானை யுடைய படைகாண்டல் முன்இனிதே

ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்இனிதே

கான்யாற் றடைகரை யூர்இனி தாங்கினிதே

மான முடையார் மதிப்பு.

விளக்கம்:

அரசன் யானைப் படைகளைக் கொண்டிருத்தல் இனிது. தசையைத் தின்று உடம்பை வளர்க்காமை இனிது. முல்லை நிலத்தில் ஆற்றினது நீராட கரைக்கண் உள்ள ஊர் இனிது. அதுபோல மதிப்புடையவரது மதிப்பு கொள்ளுதல் இனிது.

பாடல் - 05

கொல்லாமை முன்இனிது கோல்கோடி மாராயஞ்

செய்யாமை முன்இனிது செங்கோலன் ஆகுதல்

எய்துங் திறத்தால் இனிதென்ப யார்மட்டும்

பொல்லாங் குரையாமை நன்கு.

விளக்கம்:

கொல்லாமை முன் இனிது. அரசன் நடுவு நிலைமை தவறி சிறப்பு செய்யாமை இனிது. செங்கோலனாக இருப்பது இனிது. யாவரிடத்தும் திறமையால் கூடியமட்டும் குற்றம் கூறாமை மிக இனிது.

பாடல் - 06

ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்இனிதே

பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே

வாய்ப்புடைய ராகி வலவைகள் அல்லாரைக்

காப்படையக் கோடல் இனிது.

விளக்கம்:

கூடிய மட்டும் தருமம் செய்தல் இனிது. சான்றோர்களின் பயனுடைய சொல் இனிது. கல்விச் செல்வம் அதிகாரம் ஆண்மை முதலிய எல்லாம் இருந்தும் "நான்" என்ற குணம் இல்லாதவனைத் துணையாகக் கொள்வது இனிது.

பாடல் - 07

அந்தண ரோத்துடைமை ஆற்ற மிகஇனிதே

பந்தம் உடையான் படையாண்மை முன்இனிதே

தந்தையே ஆயினுந் தானடங்கான் ஆகுமேல்

கொண்டடையா னாகல் இனிது.

விளக்கம்:

பிராமணர்க்கு வேதம் ஓதுதல் இனிது. இல்லறத்தாருக்கு பற்றுபாசம் இனிது. படையுடையானுக்கு வீரம் இனிது. தந்தையே ஆனாலும் அவர் கூறும் தவறானவற்றைச் செய்யாமை இனிது.

பாடல் - 08

ஊருங் கலிமா உரனுடைமை முன்இனிதே

தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்

கார்வரை யானைக் கதங்காண்டல் முன்இனிதே

ஆர்வ முடையவர் ஆற்றவும் நல்லவை

பேதுறார் கேட்டல் இனிது.

விளக்கம்:

வீரனுக்கு வலிமையான குதிரை இனிது. மாலையணிந்த அரசர்களுக்கு போர்க்களத்தில் கரிய மலைபோன்ற யானைகள் சினம் கொண்டு போரிடுதலைப் பார்த்தல் இனிது. அன்புடையார் வாய்ச் சொற்கள் கேட்பது இனிது.

பாடல் - 09

தங்க ணமர்புடையார் தாம்வாழ்தல் முன்இனிதே

அங்கண் விசும்பின் அகல்நிலாக் காண்பினிதே

பங்கமில் செய்கைய ராகிப் பரிந்துயார்க்கும்

அன்புடைய ராதல் இனிது.

விளக்கம்:

தம்மை ஒட்டி வாழும் நண்பர்கள் செல்வத்துடன் வாழ்தல் இனிது. அழகிய அகன்ற வானத்தில் விரிந்த நிலாவைக் காணுதல் இனிது. குற்றமில்லாத செய்கை உடையவராய் அன்புடையவராயிருத்தல் இனிது.

பாடல் - 10

கடமுண்டு வாழாமை காண்டல் இனிதே

நிறைமாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே

மனமாண்பி லாதவரை யஞ்சி யகறல்

எனைமாண்புந் தான்இனிது நன்கு.

விளக்கம்:

கடன் வாங்கி வாழாமல் இருத்தல் இனிது. கற்பில்லாத மனைவியை நீக்கிவிடுதல் இனிது. மனத்தின்கண் பெருமை இல்லாதவரை விட்டு அஞ்சி அகலுதல் எல்லாவற்றையும் விட மிக இனிது.

பாடல் - 11

அதர்சென்று வாழாமை ஆற்ற இனிதே

குதர்சென்று கொள்ளாத கூர்மை இனிதே

உயிர்சென்று தான்படினும் உண்ணார்கைத் துண்ணாப்

பெருமைபோற் பீடுடையது இல்.

விளக்கம்:

தவறான வழியிற் சென்று வாழாதிருப்பது இனிது. தவறான வழியிற் பொருள் தேடாமை மிக இனிது. உயிரே சென்றாலும் உண்ணத்தகாதார் இடத்து உணவு உண்ணாதிருத்தல் மிக இனிது.

பாடல் - 12

குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே

சுழறும் அவையஞ்சான் கல்வி இனிதே

மயரிக ளல்லராய் மாண்புடையார்ச் சேரும்

திருவுந்தீர் வின்றேல் இனிது.

விளக்கம்:

குழந்தைகள் நோயில்லாது வாழ்வது இனிது. சான்றோர்கள் சபையில் அஞ்சாதவனுடைய கல்வி இனிது. தெளிவான பெருமை உடையவரின் செல்வம் நீங்காமை இனிது.

பாடல் - 13

மான மழிந்தபின் வாழாமை முன்இனிதே

தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே

ஊனமொண் றின்றி உயர்ந்த பொருளுடைமை

மானிடவர்க் கெல்லாம் இனிது.

விளக்கம்:

ஒருவர்க்குத் தன் நிலையினின்றும் தாழ்ந்து பெருமை அழிய நேரிட்டால், மேலும் உயிர் வாழாதிருப்பது மிக இனியது. தானம் செய்து வாழ்வதற்குத் தகுந்தபடி தனது செல்வம் அழிந்து விடாமல் தான் அடக்கமாக வாழ்வதும் இனிமையானது. இடர்ப்பாடு ஏதும் சிறிதும் இல்லாமல் குற்றமற்ற பொருளை மிகுதியாகப் பெற்றிருப்பது மக்கள் அனைவர்க்கும் இனிமையானது. மானம் அழிதல் - நிலையினின்றும் தாழ்தல்.

பாடல் - 14

குழவி தளர்நடை காண்டல் இனிதே

அவர்மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே

வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து

மனனஞ்சான் ஆகல் இனிது.

விளக்கம்:

சின்னஞ்சிறு குழந்தைகளின் தள்ளாடும் நடையைக் காண்பது பெற்றோர்க்கும் உற்றோர்க்கும் இனியது. அக்குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்பது தேவாமிர்தத்தினை விட இனியது. தீய செயல்களைச் செய்தவன் அதன் பயனாகத் துன்பம் வந்து அவன் மனம் நொந்து வருந்தும் போதும் மனம் அஞ்சாது இருப்பது இனியது.

பாடல் - 15

பிறன்மனை பின்னோக்காப் பீடினி தாற்ற

வறனுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர் வினிதே

மறமன்னர் தங்கடையுள் மாமலைபோல் யானை

மதமுழக்கங் கேட்டல் இனிது.

விளக்கம்:

பிறனுடைய மனைவியைத் திரும்பிப் பார்க்காத பெருமை இனிதாகும். போதுமான நீர் இல்லாததால் காய்ந்து வருந்தும் பசுமையான பயிர்களுக்கு வான்மேகத்திலிருந்து மழை பொழிவது மிக இனிதாகும். வீரமுடைய அரசரின் கடைவாயிலாகிய பின் முற்றத்தில் பெரிய மலை போன்ற யானைகளின் மதங்கொண்ட பிளிறலைக் கேட்பதும் இனிதாகும்.

பாடல் - 16

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே

மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே

எள்துணை யானும் இரவாது தான்ஈதல்

எத்துணையும் ஆற்ற இனிது.

விளக்கம்:

கற்றறிந்தவர் முன் தான் கற்ற கல்வியைச் சொல்வது மிக இனியது. அறிவால் மேம்பட்ட கல்வியாளரைச் சேர்ந்து பொருந்தியிருப்பது மிகப் பெருமையுடன் முற்றிலும் இனியது.

எள்ளளவாவது, தான் பிறரிடம் யாசிக்காமல், தான் பிறர்க்குத் தானம் கொடுத்துத் தர்மம் செய்வது எல்லா விதத்திலும் மிக இனியது.

பாடல் - 17

நாட்டார்க்கு நல்ல செயலினி தெத்துணையும்

ஒட்டாரை ஒட்டிக் கொளல் அதனின் முன்இனிதே

பற்பல தானியத்தது ஆகிப் பலருடையும்

மெய்த்துணையுஞ் சேரல் இனிது.

விளக்கம்:

தன்னுடன் நட்புடையவர்க்கு இனிய உதவிகளைச் செய்வது இனிமையானது. எந்தவகையிலும் சேராத தன் பகைவரையும் நட்பாக்கிக் கொள்வது அதைவிட மிக இனிமை யானது. பற்பல வகை உணவுப் பழக்கமுடையவரானாலும் புறத்தார் பார்வைக்கு ஏதுவாக மெய்க் காப்பு வீரரோடு அரணாகப் பொருந்தியிருப்பது இனிமையானது.

பாடல் - 18

மன்றின் முதுமக்கள் வாழும் பதிஇனிதே

தந்திரத்தின் வாழும் தவசிகள் மாண்பினிதே

எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்

கண்டெழுதல் காலை இனிது.

விளக்கம்:

ஊர்ப்பொது மன்றத்தில் மூத்த அறிவுடையோர் வாழ்கின்ற ஊர் இனியது. அறநூல்களில் சொல்லிய விதிப்படி வாழ்கின்ற தவத்தோரது மாட்சிமை இனியது. குறைவில்லாத மிகுந்த சிறப்பினை உடைய இரு முதுமக்களாகிய தாய் தந்தையரை காலையில் அவர்கள் இருக்குமிடம் சென்று பார்த்து அவர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுவது இனியது.

பாடல் - 19

நட்டார்ப் புறங்கூறான் வாழ்தால் நனிஇனிதே

பட்டாங்கு பேணிப் பணிந்தொழுதல் முன்இனிதே

முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது

தக்குழி ஈதல் இனிது.

விளக்கம்:

தன்னிடம் நட்புக்கொண்டவர்களைப் பற்றிப் புறங்கூறாதவனாய் வாழ்வது மிக இனியது. சத்தியத்தைப் பேணிப் பாதுகாத்து யாவர்க்கும் பணிவுடன் நடப்பது அதைவிட இனியது. குறையில்லாத பெரும் பொருளைத் தேடிச் சம்பாதித்தால் அப்பொருளைத் தகுதி வாய்ந்த தேவையுள்ளோர்க்கு கொடுத்து உதவுவது இனியது.

பாடல் - 20

சலவாரைச் சாரா விடுதல் இனிதே

புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே

மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்

தகுதியால் வாழ்தல் இனிது.

விளக்கம்:

வஞ்சகரைச் சாராமல் அவர்களது தொடர்பை விட்டு விடுவது இனியது. கற்றறிந்த அறிவுடையாருடைய வாய்ச் சொற் களைப் போற்றி அதன்படி நடப்பது இனியது. அகன்ற இடத்தையுடைய இப்பூமியில் வாழ்கின்ற எல்லா உயிர்களுடனும் இணக்கமாக வாழ்வது இனியது.

பாடல் - 21

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்தல் இனிதே

அறம்புரிந் தல்லவை நீக்கல் இனிதே

மறந்தேயும் மாணா மயரிகள் சேராத்

திறந்தெரிந்து வாழ்தல் இனிது.

விளக்கம்:

பிறருடைய கைப்பொருளை அபகரிக்காமல் வாழ்வது இனியது. தர்மம் செய்து பாவத்தை நீக்குதல் இனிது. மாட்சிமை இல்லாத அறிவிலிகளைச் சேராத வழிகளை ஆராய்ந்து வாழ்தல் இனிது.

பாடல் - 22

வருவா யறிந்து வழங்கல் இனிதே

ஒருவர்பங் காகாத ஊக்கம் இனிதே

பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்

திரிபின்றி வாழ்தல் இனிது.

விளக்கம்:

தன் வருவாய்க்கு ஏற்றார் போன்று கொடுத்தல் இனிது. ஒருவனுக்குச் சார்பாகாத ஒழுக்கம் இனிது. பெரிய யானையை உடையவராயினும் தாம் விரும்பியவற்றை ஆராயாது செய்யாதவராய், தம் இயல்பிலிருந்து மாறாதவராய் வாழ்தல் இனிது.

பாடல் - 23

காவோ டறக்குளம் தொட்டல் மிகஇனிதே

ஆவோடு பொன்னீதல் அந்தணர்க்கு முன்இனிதே

பாவமும் அஞ்சாராய்ப் பற்றுந் தொழில்மொழிச்

சூதரைச் சோர்தல் இனிது.

விளக்கம்:

சோலையுடன் கூடிய பொதுக் குளத்தை வெட்டுதல் இனிது. அந்தணர்க்குப் பசுவோடு பொன்னைக் கொடுத்தல் இனிது. பாவத்திற்கு அஞ்சாமல் சூதாடுகிறவர்களை நீக்கி வாழ்தல் இனியது.

பாடல் - 24

வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே

ஒல்லுந் துணையும்ஒன்று உய்ப்பான் பொறை இனிதே

இல்லாது காமுற் றிரங்கி இடர்ப்படார்

செய்வது செய்தல் இனிது.

விளக்கம்:

மேம்படுத்தலை விரும்பி கோபம் இல்லாமல் இருப்பவனின் தவம் இனியது. எடுத்துக் கொண்ட வேலையை முடிக்கும் ஆற்றல் உடையவனின் பொறுமை மிக இனிது. தம்மிடம் இல்லாத பொருளை நினைத்து துன்பப்படாமல் இருப்பது இனிது.

பாடல் - 25

ஐவாய வேட்கை யவாவடக்கல் முன்இனிதே

கைவாய்ப் பொருள்பெறினுங் கல்லார்கண் தீர்வினிதே

நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்

புல்லா விடுதல் இனிது.

விளக்கம்:

ஐந்து வழியால் வருகின்ற ஆசைகளை அடக்குதல் இனிது. கையில் நிற்கக்கூடிய பொருளைப் பெறுவதாக இருந்தாலும் கல்லாதவரை விடுதல் இனிது. இந்த உலகம் நிலையானது என்போரின் நட்பினைக் கை விடுதல் இனியது.

பாடல் - 26

நச்சித்தற் சென்றார் நசைகொல்லா மாண்பினிதே

உட்கில் வழிவாழா ஊக்கம் மிகஇனிதே

எத்திறத் தானும் இயைவ கரவாத

பற்றினின் பாங்கினியது இல்.

விளக்கம்:

ஒரு பொருளை விரும்பித் தன்னை அடைந்தவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுதல் இனிது. மதிப்பு இல்லாதவிடத்து வாழாதவனின் மனவெழுச்சி இனிது. எப்படியானாலும் பிறருக்குக் கொடுக்கும் பொருளை மறைக்காதவனின் அன்பு மிகப்பெரியது.

பாடல் - 27

தானங் கொடுப்பான் தகையாண்மைமுன் இனிதே

மானம் படவரின் வாழாமை முன்இனிதே

ஊனங்கொண் டாடார் உறுதி உடையவை

கோள்முறையாற் கோடல் இனிது.

விளக்கம்:

அபயம் கொடுப்பவனின் ஆண்மை மிக இனிது. மானம் இழந்து வாழாமை இனிது. குற்றம் கூறாதவரின் உறுதி இனிது. நன்மையானவற்றை முறைப்படிப் பெறுதல் இனிது.

பாடல் - 28

ஆற்றாமை யாற்றென் றலையாமை முன்இனிதே

கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வனிதே

ஆக்க மழியினும் அல்லவை கூறாத

தேர்ச்சியின் தேர்வினியது இல்.

விளக்கம்:

ஒரு வேலையைச் செய்யத் தெரியாதவனிடத்து ஒரு வேலையைக் கொடுக்காமை இனிது. எமனின் வருகையை எதிர்பார்த்து வாழ்வது இனிது. செல்வம் இழந்தாலும் பாவச் சொற்களைக் கூறாதிருப்பது எல்லாவற்றையும் விட இனியது.

பாடல் - 29

கயவரைக் கைகழிந்து வாழ்தல் இனிதே

உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே

எளியர் இவரென் றிகழ்ந்துரையா ராகி

ஒளிபட வாழ்தல் இனிது.

விளக்கம்:

கீழ் மக்களை நீக்கி வாழ்தல் இனியது. தன் உயர்வினை நினைத்து ஊக்கத்துடன் வாழ்தல் இனிது. வறியவர் என்று இகழாது புகழ்பட வாழ்தல் இனிதாகும்.

பாடல் - 30

நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனிஇனிதே

மன்றக் கொடும்பா டுரையாத மாண்பினிதே

அன்றறிவார் யாரென் றடைக்கலம் வெளவாத

நன்றியின் நன்கினியது இல்.

விளக்கம்:

ஒருவர் செய்த உதவியினை நினைத்து வாழ்தல் இனிது. நீதி சபையில் நடுநிலை தவறாமல் இருத்தலின் பெருமை இனிது. யாருக்கும் தெரியாது என்று அடைக்கலமாய் வந்த பொருளை அபகரிக்காமல் இருத்தல் இனிதின் இனிது.

பாடல் - 31

அடைந்தார் துயர்கூரா ஆற்றல் இனிதே

கடன்கொண்டுஞ் செய்வன செய்தல் இனிதே

சிறந்தமைந்த கேள்விய ராயினும் ஆராய்ந்து

அறிந்துரைத்தல் ஆற்ற இனிது.

விளக்கம்:

தம்மை அடைக்கலமாக வந்தவன் துன்பத்தை நீக்குவது இனிது. கடன் வாங்கியாவது செய்ய வேண்டியவற்றைச் செய்வது இனிது. மிகச் சிறந்த நுட்பமான அறிவுடையவர்களாக இருந்தாலும் ஒரு பொருளை ஆராய்ந்து உரைப்பது இனிது ஆகும்.

பாடல் - 32

சுற்றறிந்தார் கூறுங் கருமப் பொருள்இனிதே

பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்இனிதே

தெற்றென இன்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்

பத்திமையிற் பாங்கினியது இல்.

விளக்கம்:

கற்று அறிந்தவர்கள் கூறும் கருமப் பயன் இனிதாகும். அன்பில்லாத அரசனின் கீழ் வாழாதிருத்தல் இனிதாகும். ஆராயாமல் கெடுதல் செய்தவர்களுக்கு தீங்கு செய்யாமல் அன்புடையவராக இருத்தலைப் போன்று இனியது வேறு இல்லை.

பாடல் - 33

ஊர்முனியா செய்தொழுகும் ஊக்கம் மிகஇனிதே

தானே மடிந்திராத் தாளாண்மை முன்இனிதே

வாய்மயங்கு மண்டமருள் மாறாத மாமன்னர்

தானை தடுத்தல் இனிது.

விளக்கம்:

ஊர் வெறுக்காதவற்றைச் செய்து வருபவனின் ஊக்கம் இனிதாகும். சோம்பல் இல்லாது முயற்சி உடையவனின் ஆண்மை இனிதாகும். வாள் கலக்குகின்ற போரில் மாறாத பெருமை உடைய அரசர்களின் படைகளை எதிர்த்தல் ஓர் அரசனுக்கு இனிதாகும்.

பாடல் - 34

எல்லிப் பொழுது வழங்காமை முன்இனிதே

சொல்லுங்கால் சோர்வின்றச் சொல்லுதல் மாண்பினிதே

புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை

கொள்ளர் விடுதல் இனிது.

விளக்கம்:

இரவில் செல்லாமல் இருப்பது இனியது. சொல்லும் இடத்து மறதியின்று சொல்லுதல் இனிதாகும். தானாக வலிய வந்து நட்புக் கொள்ளும் கயவர்களின் நட்பினைக் கைவிடுதல் இனிதாகும்.

பாடல் - 35

ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரிதல் முன்இனிதே

முற்றான தெரிந்து முறைசெய்தல் முன்இனிதே

பற்றினலாய்ப் பல்லுயிர்க்கும் பாத்தூற்றுப் பாங்கறிதல்

வெற்வேறில் வேந்தர்க்கு இனிது.

விளக்கம்:

வெற்றியைத் தருகின்ற பெருமை உடைய அரசன் ஒற்றன் கூறியவற்றை, வேறு ஒற்றராலே ஆராய்ந்து பார்ப்பது இனிது. ஆராய்ந்து பார்த்து நீதி வழங்குதல் இனிதாகும். எல்லா உயிர்களையும் சமமாகப் பாவித்து முறை செய்தல் இனிதாகும்.

பாடல் - 36

அவ்வித் தழுக்கா றுரையாமை முன்இனிதே

செவ்வியனாய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே

கவ்வித்தாங் கொண்டுதாங் கண்டது காமுற்று

வவ்வார் விடுதல் இனிது.

விளக்கம்:

மனக்கேடான பொறாமைச் சொற்களைச் சொல்லாமை இனிதாகும். மனக்கேடு இல்லாமல் சினத்தை விடுத்து வாழ்வது இனிதாகும். தனக்கு வேண்டிய பொருளை அபகரிக்காமல் அதனை மறந்து விடுதல் இனிது.

பாடல் - 37

இளமையை மூப்பென் றுணர்தல் இனிதே

கிளைஞர்மாட் டச்சின்மை கேட்டல் இனிதே

தடமென் பணைத்தோள் தளிரிய லாரை

விடமென் றுணர்தல் இனிது.

விளக்கம்:

தனக்குள்ள இளமைப் பருவத்தை மூப்பென்று உணர்தல் இனிது. சுற்றத்தாரிடம் இனிய சொற்களைக் கேட்பது இனிதாகும். மூங்கிலை யொத்த தோள்களையும் தளிரையொத்த மென்மையையும் உடைய மகளிரை விஷம் என்று உணர்தல் இனிது.

பாடல் - 38

சிற்றா ளுடையான் படைக்கல மாண்பினிதே

நட்டா ருடையான் பகையாண்மை முன்இனிதே

எத்துணையும் ஆற்ற இனிதென்ப பால்படுங்

சுற்றா உடையான் விருந்து.

விளக்கம்:

ஆயுதங்களைக் கொண்ட இளம் வீரர்கள் படை இனிது. சுற்றத்தை உடையவனின் பகையை அழிக்கும் தன்மை இனிது. கன்றோடு பொருந்திய பசுவுடையவனது விருந்து எல்லா வகையினும் இனியது.

பாடல் - 39

பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்இனிதே

துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே

உற்றபே ராசை கருதி அறனொரூஉம்

ஒற்கம் இலாமை இனிது.

விளக்கம்:

பிச்சையெடுத்து உண்பவன் கோபம் கொள்ளாதிருத்தல் இனிது. துன்பத்தில் இருந்தாலும் துன்பம் கூறாது இருப்பவனின் பெருமை இனிது. மிக்க பேராசையைக் கொண்டு அறவழியிலிருந்து நீங்காதிருக்கும் உறுதி இனிது.

பாடல் - 40

பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே

வித்துற்குற் றுண்ணா விழுப்பம் மிகஇனிதே

பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய

கற்றலிற் காழினியது இல்.

விளக்கம்:

பத்துப் பொருள் கொடுத்தாயினும் உள்ளூரிலிருந்து வாழ்தல் இனிது. விதைக்கென வைத்த தானியத்தை உண்ணாதிருத்தல் இனிது. பல நாட்களுக்கு நன்மையைச் சொல்லும் நூல்களைக் கற்பதைப்போல இனிதான செயல் வேறு ஒன்று இல்லை.

## அலகு-5திரிகடுகம்

- **அறத்தின் சிறப்பை பற்றி உயர்வைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது.**
- **சுக்கு,மிளகு, திப்பிலி ஆகிய முப்பொருள்களால் ஆகிய மருந்து உடல் நோயை போக்குவது போல் இந்நூல் கூறுகிறது.**
- **நம் உள்ளத்தில் ஏற்படும் நோயை போக்கும் தன்மை உடையதாக கூறுகின்றது**
- **கல்வி நெறிமுறைகளை அறிய முடிகிறது.**
- **மனிதரின் உடல்,மனம்,ஆன்மா பற்றி கூறுகிறது**

## திரிகடுகம்

பாடல் - 01

அருந்ததிக் கற்பினார் தோளும், திருந்திய

தொல் குடியில் மாண்டார் தொடர்ச்சியும், சொல்லின்

அரில் அகற்றும் கேள்வியார் நட்பும், - இம் மூன்றும்

திரிகடுகம் போலும் மருந்து.

விளக்கம்:

அருந்ததி போன்று கற்புடைய பெண்ணின் தோளும், நல்ல குடியில் தோன்றிய பெருமை உடையவரது நட்பும், சொற்களினிடத்தே குற்றங்களை அகற்றும் கேள்வி உடையவரது நட்பும் இம்மூன்றும் திருகடுகம் போன்று சிறந்ததாம்.

பாடல் - 02

ஒழுக்கமுடையார் தொழில்கள்

தன் குணம் குன்றாத் தகைமையும், தா இல் சீர்

இன் குணத்தார் ஏவின செய்தலும், நன்கு உணர்வின்

நான்மறையாளர் வழிச் செலவும், - இம் மூன்றும்

மேல் முறையாளர் தொழில்.

விளக்கம்:

தனது குடிப்பிறப்பின் சிறப்பு குறையாத ஒழுக்கமும், இனிய குணத்தையுடையோர் ஏவிய தொழில்களைச் செய்வதும், வேதங்கள் கூறிய வழியில் நடத்தலும், மேன்மையானவர் செய்யும் தொழில்களாகும்.

பாடல் - 03

அறியாமையால் வரும் கேடு

கல்லார்க்கு இன்னா ஒழுகலும், காழ்க் கொண்ட

இல்லாளைக் கோலால் புடைத்தலும், இல்லம்

சிறியாரைக் கொண்டு புகலும், - இம் மூன்றும்

அறியாமையான் வரும் கேடு.

விளக்கம்:

கற்றறியாதவருடன் நட்பாய் இருப்பதும், கற்புடை மனைவியை அடித்தலும், சிற்றறிவினரை தம் வீட்டுள் சேர்ப்பதும் அறியாமையினால் விளைகின்ற கேடுகளாகும்.

பாடல் - 04

சாவதற்குரியவன் தொழில்கள்

பகை முன்னர் வாழ்க்கை செயலும், தொகை நின்ற

பெற்றத்துள் கோல் இன்றிச் சேறலும், முன் தன்னைக்

காய்வானைக் கை வாங்கிக் கோடலும், - இம் மூன்றும்

சாவ உறுவான் தொழில்.

விளக்கம்:

பகைவருக்கு முன்னே தன் செல்வத்தைக் காட்டுவதும், மாட்டு மந்தையில் கோல் இல்லாமல் செல்வதும், பகைவரோடு நட்பு பாராட்டுவதும் கெடுதியை உண்டாக்கும்.

பாடல் - 05

அருந்துன்பம் காட்டும் நெறி

வழங்காத் துறை இழிந்து நீர்ப் போக்கும், ஒப்ப

வீழைவு இலாப் பெண்டிர் தோள் சேர்வும், உழந்து

விருந்தினனாய் வேற்றூர் புகலும், - இம் மூன்றும்

அருந் துயரம் காட்டும் நெறி.

விளக்கம்:

பழகாத துறையில் இறங்கிப் போதலும், விருப்பமில்லாத பெண்ணைச் சேர்வதும், வருந்திப் பிறர்க்கு விருந்தாளியாவதும் துயரத்தைத் தரும்.

பாடல் - 06

ஆண்மைச் செல்வங்கள்

பிறர் தன்னைப் பேணுங்கால் நாணலும், பேணார்

திறன் வேறு கூறின் பொறையும், அற வினையைக்

கார் ஆண்மை போல ஒழுகலும், - இம் மூன்றும்

ஊராண்மை என்னும் செருக்கு.

விளக்கம்:

பிறர் தன்னை உயர்த்திப் பேசும்போது நாணுதலும், தன்னை விரும்பாதவர் இகழ்ந்து பேசும்போது பொறுத்துக் கொள்ளுதலும், பிறர்க்கு கைம்மாறு கருதாமல் உதவி செய்வதும் சிறந்த செல்வமாகும்.

பாடல் - 07

ஊமை கண்ட கனா

வாளை மீன் உள்ளல் தலைப்படலும், ஆள் அல்லான்

செல்வக் குடியுள் பிறத்தலும், பல் சவையின்

அஞ்சுவான் கற்ற அரு நூலும், - இம் மூன்றும்

துஞ்சு ஊமன் கண்ட கனா.

விளக்கம்:

உள்ளன் என்னும் பறவை வாளை என்னும் மீனைப் பிடிக்க முயற்சிப்பதும், திறமையில்லாதவன் உயர்ந்த குடியில் பிறத்தலும், அஞ்சும் இயல்புடைய கற்றாரின் கல்வியும் ஊமை கண்ட கனாவைப் போல யாருக்கும் பயன்படாதது ஆகும்.

பாடல் - 08

பேசக்கூடாத இயல்பு உடையவை

தொல் அவையுள் தோன்றும் குடிமையும், தொக்கு இருந்த

நல் அவையுள் மேம்பட்ட கல்வியும், வெல் சமத்து

வேந்து உவப்ப அட்டு ஆர்த்த வென்றியும், - இம் மூன்றும்

தாம் தம்மைக் கூறாப் பொருள்.

விளக்கம்:

பழமையை ஆராயவல்லோர் கூடியிருக்கும் அவையில் நல்ல குடிப்பிறப்பும், பலவகை நூலோர் கூடியிருக்கும் அவையில் நல்ல கல்வி அறிவும், போர்க்களத்தில் வேந்தன் மகிழ பகைவரை கொன்று பெற்ற வெற்றியும், தானாகத் தெரிய வேண்டுமே தவிர, தாமே தம்மைக் குறித்து புகழ்ந்து பேசக்கூடாது.

பாடல் - 09

மூடர் விரும்புபவை

பெருமை உடையார் இனத்தின் அகறல்,

உரிமை இல் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்,

விழுமிய அல்ல துணிதல், - இம் மூன்றும்

முழு மக்கள் காதலவை.

விளக்கம்:

பெருந்தன்மை உடையாரிடம் நட்பு கொள்ளாதிருத்தலும், தமக்கு உரிமை இல்லாத பெண்களை விரும்புதலும், சிறந்தவை அல்லாதவற்றைச் செய்வதும் அறிவற்ற மூடர்கள் விரும்பிச் செய்வதாம்.

பாடல் - 10

நன்மை அளிக்காதவை

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கு அறுக்கும்

மூத்தோரை இல்லா அவைக் களனும், பாத்து உண்ணாத்

தன்மையிலாளர் அயல் இருப்பும், - இம் மூன்றும்

நன்மை பயத்தல் இல.

விளக்கம்:

கற்பிக்க இயலாதவர் ஊரிலிருத்தலும், கல்வி கேள்விகளில் முதிர்ந்தவர் இல்லாத சபையும், பகுத்து உண்ணும் தன்மை இல்லாதவர் பக்கத்தில் இருத்தலும் ஒருவருக்கு நன்மை தராது.

பாடல் - 11

ஊரவர் துன்பப்படும் குற்றம் உடையவை

விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும், வீழக்

களியாதான் காவாது உரையும், தெளியாதான்

கூரையுள் பல் காலும் சேறலும், - இம் மூன்றும்

ஊர் எலாம் நோவது உடைத்து.

விளக்கம்:

அழையாத ஆட்டத்தைப் பார்ப்பதும், மது உண்டவன் சொல்லும், நம்பாதவன் வீட்டிற்குப் பலமுறை செல்வதும், இம்மூன்றும் ஊரில் உள்ளோருக்கு துன்பத்தைத் தரும்.

பாடல் - 12

நன்மை அளிப்பவை

தாளாளன் என்பான் கடன் படா வாழ்பவன்

வேளாளன் என்பான் விருந்து இருக்க உண்ணாதான்

கோளாளன் என்பான் மறவாதான் - இம் மூவர்

கேள் ஆக வாழ்தல் இனிது.

விளக்கம்:

முயற்சியுடையவன் கடன்படாது வாழ்வான். உதவி செய்பவன் விருந்தினர் பசித்திருக்க உண்ணாதவன். பிறர் காரியங்களை அறிபவன் கேட்டவற்றை மறவாதவன். இம்மூவருடனும் நட்பு கொள்ளுதல் நன்மை தருவதாகும்.

பாடல் - 13

பெறற்கு அரியார்

சீலம் அறிவான் இளங்கிளை சாலக்

குடி ஓம்ப வல்லான் அரசன் வடு இன்றி

மாண்ட குணத்தான் தவசி - என மூவர்

யாண்டும் பெறற்கு அரியார்.

விளக்கம்:

பிறர் குணம் அறிந்து நடக்கும் உறவினன், குடிகளைக் காக்கும் அரசன், சிறந்த துறவி இம்மூவரும் பெறுதற்கு அரியர் ஆவார்

பாடல் - 14

அறிவுடையார் அடையாதவை

இழுக்கல் இயல்பிற்று, இளமை பழித்தவை

சொல்லுதல் வற்றாகும், பேதைமை யாண்டும்

செறுவோடு நிற்கும், சிறுமை - இம் மூன்றும்

குறுகார், அறிவுடையார்.

விளக்கம்:

இளமையில் தவறு செய்வது இயல்பு என்றாலும் தவறாகும். அறிவுடையோரால் விலக்கப்பட்டதைச் சொல்லுதல் அறியாமை. எப்போதும் சினத்தோடு நிற்றல் ஈனத்தன்மையாகும். இவற்றைக் கொண்டவரிடம் அறிவுடையார் நட்பு கொள்ளமாட்டார்.

பாடல் - 15

நட்புக் கொள்ளத் தகாதவர்

பொய் வழங்கி வாழும் பொறியறையும், கை திரிந்து

தாழ்விடத்து நேர் கருதும் தட்டையும், ஊழினால்

ஒட்டி வினை நலம் பார்ப்பானும், - இம் மூவர்

நட்கப் படாஅதவர்.

விளக்கம்:

பொய் பேசி வாழும் செல்வந்தன், தனக்கு மேலானவன் தாழ்ந்த போது போற்றாதவன், விதியால் நண்பன் துன்பப்படும்போது பயனை எதிர் பார்ப்பவன், இம்மூவரும் யாராலும் நட்பு கொள்ளத் தகாதவராவார்.

பாடல் - 16

இறவாத உடம்பை அடைந்தவர்

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மாசு இல் சீர்ப்

பெண்ணினுள் கற்புடையாள் - பெற்றானும், உண்ணு நீர்க்

கூவல் குறை இன்றித் தொட்டானும், - இம் மூவர்

சாவா உடம்பு எய்தினார்.

விளக்கம்:

மண்ணுலகத்தில் புகழை அடைந்தவனும், கற்புடைய மனைவியைப் பெற்ற கணவனும், கிணறுகளைத் தோண்டி வைத்தவனும், எக்காலத்தும் அழியாத புகழைப் பெற்றவராவார். அவர் இறந்தாலும் அவர் புகழ் நிலைக்கும்.

பாடல் - 17

கல்வித் தோணியைக் கைவிட்டவர்

மூப்பின்கண் நன்மைக்கு அகன்றானும், கற்புடையாள்

பூப்பின்கண் சாராத் தலைமகனும், வாய்ப் பகையுள்

சொல் வென்றி வேண்டும் இலிங்கியும், - இம் மூவர்

கல்விப் புணை கைவிட்டார்.

விளக்கம்:

மூப்பு வந்தபோது துறவறத்தை மேற்கொள்ளாதவனும், கற்புடைய மனைவியைக் குறித்த காலத்தில் சேராதவனும், வாய்மொழி வெற்றியை விரும்பி பேசுகின்ற தவசிகளும், கல்வித் தெப்பத்தைக் கைவிட்டவர்கள் ஆவர்.

பாடல் - 18

கள்வர் போல் அஞ்ச வேண்டியவர்

ஒருதலையான் வந்துறூஉம் மூப்பும், புணர்ந்தார்க்கு

இரு தலையும் இன்னாப் பிரிவும், உருவினை

உள் உருக்கித் தின்னும் பெரும் பிணியும், - இம் மூன்றும்

கள்வரின் அஞ்சப்படும்.

விளக்கம்:

உறுதியாக வரும் மூப்பு, நண்பரின் பிரிவு, உடம்பினை உருக்குகின்ற தீராத நோய், இம்மூன்றுக்கும் அஞ்சி எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

பாடல் - 19

பழி முதலியவற்றினின்று நீங்காதவர்

கொல் யானைக்கு ஓடும் குணமிலியும், எல்லில்

பிறன் கடை நிற்று ஒழுகுவானும், மறம் தெரியாது

ஆடும் பாம்பு ஆட்டும் அறிவிலியும், - இம் மூவர்,

நாடுங்கால், தூங்குபவர்.

விளக்கம்:

யானைக்கு அஞ்சி ஓடுகின்ற வீரனும், அயலான் மனைவியை விரும்புபவனும், நச்சுப் பாம்பை ஆட்டுகின்றவனும், விரைவில் கெடுவர்.

பாடல் - 20

எல்லார்க்கும் இன்னாதன

ஆசை பிறன்கண் படுதலும், பாசம்

பசிப்ப மடியைக் கொளலும், கதித்து ஒருவன்

கல்லான் என்று எள்ளப்படுதலும், - இம் மூன்றும்

எல்லார்க்கும் இன்னாதன.

விளக்கம்:

பிறரிடமுள்ள பொருளுக்கு ஆசைப்படுவதும், சோம்பி இருத்தலும், கல்லான் என்று இகழப்படுவதும் யாவருக்கும் துன்பம் தருபவைகளாகும்.

பாடல் - 21

நல்லவரின் கொள்கைகள்

வருவாயுள் கால் வழங்கி வாழ்தல், செரு வாய்ப்பச்

செய்தவை நாடாச் சிறப்புடைமை, எய்தப்

பல நாடி நல்லவை கற்றல், - இம் மூன்றும்

நல மாட்சி நல்லவர் கோள்.

விளக்கம்:

தனக்கு வரும் வருவாய்க்கு ஏற்றபடி அறம் செய்தலும், போரில் வெற்றி அடைதலும், நல்லவைகளைப் படித்தலும் நல்லவருடைய கொள்கைகள் ஆகும்.

# மூதுரை

## நோக்கம்

- **சான்றோர் பெருமைகளை அறிந்து கொள்ள முடிகிறது.**
- **உதவி செய்வதால் ஏற்படும் இன்பத்தை பற்றி அறியலாம்.**
- **உழவுத் தொழிலின் மேன்மையை உணர்த்துகிறது .**
- **வரவுக்கேற்ற செலவு செய்வதின் சிறப்பை கூறுகிறது.**
- **இனிமையான சொற்களை பேசுவதால் ஏற்படும் பயனை உணரலாம்.**

வெண்பா : 1

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி

"என்று தருங்கொல்?" எனவேண்டாம் - நின்று

தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்

தலையாலே தான்தருத லால்.

விளக்கம்

ஒருவர்க்கு உதவி செய்யும்போது, அதற்கு ப்ரதியுபகாரமும், நன்றியும் எப்போது கிடைக்கும் என்று கருதி செய்யக்கூடாது. எப்படிப்பட்ட நீரை வேர் மூலம் உண்டாலும், நன்கு தளராது வளர்ந்துள்ள தென்னை மரம் அந்நீரை சுவையான இளநீராக தந்து விடும். அதுபோல ஒருவர்க்கு செய்த சிறு உதவியும் பெரிய விதத்தில் நமக்கு ஒரு காலம் நிச்சயம் நன்மை பயக்கும்.

1.நின்று - நியலகபற்று, தளைா - பசோா□லேல், வளர் - வளர்கின்ற, கதங்கு -

கதன்யனயோனது, தாள் உண்ட நீரை - தன் அடியோல் உண்ை தண்ண ீயை, தரலயாநல - தன்

முடியோபல, தான் தருதலால் - (சுயவயுள்ள இளநீை்க்கித்) தோபன தருதலோல், ஒருவற்கு -

(நற்குணமுயைய) ஒருவனுக்கு, நன்றி கசய்தக்கால் - உதவி கசய்தோல், அந்நன்றி -

அவ்வுதவியய, என்று தருங்ககால் - அவன் எப்கபோழுது கசய்வோபனோ, என நவண்டா - என்று

ஐயுற பவண்டுவதில்யல.நற்குணமுயையவனுக்கு உதவி கசய்தோல், அவனுஞ் சிறந்த

உதவியய வணக்கத்பதோடு வியைந்து கசய்வோன் என்பதோம்.

வெண்பா : 2

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்

கல்மேல் எழுத்துப்போல் காணுமே – அல்லாத

ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்

நீர் மேல் எழுத்துக்கு நேர்.

விளக்கம்

நல்லவர்களுக்கு செய்யும் உதவி, கல்லின் மேல் எழுத்தைச் செதுக்குவது போன்றது. அது எவரும் அறியும் வண்ணம் என்றும் நிலைத்திருக்கும். அப்படியல்லாது இரக்கமற்றவர்களுக்கு செய்யும் உதவி எவர்க்கும் பயன்தராது. அது நீரின் மேல் எழுதும் எழுத்துக்களைப் போன்று பயனின்றி நிலைக்காது போகும்

2.நல்லார் ஒருவர்க்கு - நற்குணமுயைய ஒருவர்க்கு, கசய்த உபகாைம் - கசய்த

உதவியோனது, கல்நமல் எழுத்துப்நபால் - கருங்கல்லின்பேல் கவட்ைப்பட்ை எழுத்யதப்

பபோல, காணும் - அழியோது விளங்கும் அல்லாத - நல்ல வைல்லோத, ஈைம் இலா

கநஞ்சத்தார்க்கு - அன்பில்லோத வனேமுயையோர்க்கு, ஈந்த உபகாைம் - கசய்த

உதவியோனது, நீர்நமல் எழுத்திற்கு - நீரின்பேல் எழுதப்பட்ை எழுத்திற்கு, நநர் - ஒப்போக

(அழிந்துவிடும்).

வெண்பா : 3

இன்னா இளமை வறுமைவந் தெய்தியக்கால்

இன்னா அளவில் இனியவும்-இன்னாத

நாளல்லா நாள்பூந்த நன்மலரும் போலுமே

ஆளில்லா மங்கைக் கழகு.

விளக்கம்

இளமையில் வறுமையும், இயலாத முதுமையில் செல்வமும் பெற்றால் அதனால் துன்பமே. அனுபவிக்க முடியாது. அது பருவமில்லாத காலங்களில் பூக்கும் பூக்களைப் போன்றது. அதைப் போல் துணைவனில்லாத பெண்களின் அழகும் வீணே

3.இளரம - (இன்பத்யதத் தரும்) இளயேப் பருவத்தில், வறுரம வந்து

எய்தியக்கால் - வறுயே வந்து அயைந்தோல், இன்னா - அது துன்பத்யதத்

தருவதோகும், இன்னா அளவில் - துன்பத்யதத் தரும் முதுயேப் பருவத்தில், இனியவும் -

இனியனவோகிய கபோருள்களும், இன்னாத - துன்பத்யதத் தருவனவோம் (அயவ) நோள் அல்லோ

நோள் (சூடுதற்குரிய) கோலேல்லோத கோலத்தில், பூத்த நல்மலரும் - லேர்ந்த நல்ல

லேயையும், ஆள் இல்லா மங்ரகக்கு அழகும் - (அனுபவித்தற்குக்) கணவன் இல்லோத

ேங்யகயின் அழயகயும், நபாலும் - ஒக்கும்.

வெண்பா : 4

அட்டாலும் பால் சுவையில் குன்றா(து) அளவளாய்

நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு

சுட்டாலும் வெண்மை தரும்.

விளக்கம்

நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். நம் நிலை தாழ்ந்தாலும் நற்பண்புள்ளோர் சிறந்தவர்களாகவே பழகுவர். அவர்கள் நட்பு எவ்வளவு

காய்ச்சினாலும் சுவை குன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டு சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கினைப் போன்றது அவர் நட்பு.

4.பால் - போலியன, அட்டாலும் - காய்ச்சினாலும், சுரவயிற் குன்றாது - அ.ீ.து இனிய

சுயவயிற் குயறயோது சங்கு - சங்கியன, சுட்டாலும் - சுட்டு நீறோக்கினோலும், கவண்ரம

தரும் - அது கவண்ணிறத்யதபய ககோடுக்கும் (அயவபபோல), நமன் மக்கள் -

பேபலோர், ககட்டாலும் - வறுயேயுற்றோலும், நமன் மக்கநள - பேபலோை□கபவ

விளங்குவர் நண்பு அல்லார் - நட்பின் குணேில்லோத கீபழோர், அளவளாய் நட்டாலும் - கலந்து

வெண்பா : 5

அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி

எடுத்த கருமங்கள் ஆகா – தொடுத்த

உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்

பருவத்தால் அன்றிப் பழா.

விளக்கம்

கிளைகளோடு கூடிய நீண்ட மரங்களும் பருவத்தில் மட்டும் பழங்களைத் தரும். அது போல மேன்மேலும் முயன்றாலும் நாம் செய்யும் கார்யங்கள் தகுந்த காலம் கூடினால் மட்டுமே பயன் தரும்.

வெண்பா : 6

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்

பற்றலரைக் கண்டால் பணிவரோ? கல் தூண்

பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்

தளர்ந்து வளையுமோ தான்

விளக்கம்

தூண் ஓரளவுக்கு மேல் பாரத்தை ஏற்றினால் உடைந்து விழுந்து விடுமேயல்லாது, வளைந்து போகாது. அது போலவே மானக்குறைவு ஏற்பட்டால் உயிரை விட்டு விடும் தன்மையுள்ளவர்கள் எதிரிகளைக் கண்டால் பணிவதில்லை.

வெண்பா : 7

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான் கற்ற

நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு - மேலைத்

தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்

குலத்து அளவே ஆகும் குணம்

விளக்கம்

அல்லிப்பூ நீரின் அளவு எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவே வளரும். நாம் கற்ற நூல்களின் அளவே நம் அறிவு. முற்பிறப்பில் செய்த புண்ய கார்யங்களின் அளவே நாம் இப்போது அனுபவிக்கும் செல்வம். குணம் நாம் தோன்றிய குலத்தின் அளவே

வெண்பா : 8

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம் மிக்க

நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்

குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று

விளக்கம்

நல்லவர்களைக் காண்பதும், நமக்கு நன்மை பயக்கும் அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்கள் குணங்களை மற்றவரிடத்தில் சொல்வதுவும், அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நல்லது.

வெண்பா : 9

தீயாரைக் காண்பதுவும் தீதே திரு அற்ற

தீயார் சொல் கேட்பதுவும் தீதே - தீயார்

குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு இணங்கி இருப்பதுவும் தீது

விளக்கம்

தீயவர்களைப் பார்ப்பதும், பயனற்ற அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்களைப் பற்றி அடுத்தவர்களிடத்தில் சொல்வதுவும், அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நமக்குக் கெடுதியே.

வெண்பா : 10

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்

புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு

எல்லார்க்கும் பெய்யும் மழை

விளக்கம்

உழவன் நெல்லுக்குப் பாய்ச்சும் நீர் அங்கிருக்கும் புல்லுக்கும் பயனைத் தரும். அது போலவே இந்தப் பழமையான உலகில் நல்லவர் ஒருவர்க்காகப் பெய்யும் மழை (பலன்கள்) எல்லாருக்குமே பயனைத் தரும்

வெண்பா : 11

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்

விண்டு உமி போனால் முளையாதாம் கொண்ட பேர்

ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி

ஏற்றம் கருமம் செயல்

விளக்கம்

நமக்குப் பயன் தருவது கடைசியில் அரிசியே ஆனாலும், அது உமி இன்றி முளைப்பதில்லை. அது போலவே பேராற்றல் உடையவர்கள் செய்யும் செயலும் அடுத்தவர் துணையின்றி முடிவதில்லை

வெண்பா : 12

மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்

உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - கடல் பெரிது

மண்ணீரும் ஆகாது அதன் அருகே சிற்றூறல் உண்ணீரும் ஆகிவிடும்

விளக்கம்

தாழம்பூவின் மடல் பெரிதாக இருந்தாலும் வாசம் தருவதில்லை. ஆனால் அதனின் சிறிய மகிழம்பூவோ நல்ல வாசனையைத் தருகிறது. பெருங்கடலின் நீர் துணி தோய்க்கக் கூட உதவுவதில்லை, ஆனால் அதனருகிலேயே தோன்றும் சிறு ஊற்று குடிப்பதற்கும் நல்ல நீரைத் தருகிறது. எனவே உருவத்தை வைத்து ஒருவரை எடை போடக் கூடாது.

வெண்பா : 13

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்

அவையல்ல நல்லமரங்கள் - சபை நடுவே

நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய

மாட்டாதவன் நன் மரம்

விளக்கம்

கிளைகளோடும், கொம்புகளோடும் காட்டில் நிற்பவை மரங்கள் அல்ல. சபையின் நடுவே ஒருவர் தரும் ஓலையில் எழுதியிருப்பதைப் படிக்கத் தெரியாதவனும், அடுத்தவர் மனதை அறியாதவனுமே மரம் போன்றவன்

வெண்பா : 14

கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி

தானும் அதுவாக பாவித்துத் - தானும் தன்

பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலும்

கல்லாதான் கற்ற கவி

விளக்கம்

காட்டில் மயில் ஆடுவதைப் பார்த்த வான்கோழி உடனே தன்னையும் அதைப் போலவே நினைத்து தன்னுடைய அழகில்லாத சிறகை விரித்து ஆடுவதை போன்றதே, கல்வி கற்காதவன் சொல்லும் கவிதையும், அதனால் ஒரு பயனும் இல்லை. விஷயமும் இல்லை.

வெண்பா : 15

வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி

ஆங்கு அதனுக்க ஆகாரம் ஆனாற்போல பாங்கு அறியா

புல் அறிவாளர்க்குச் செய்த உபகாரம்

கல்லின் மேல் இட்ட கலம்

விளக்கம்

புலிக்கு நோயைக் குணமாக்கிய விஷத்தைப் போக்கும் வைத்யன் உடனே அதற்கே உணவாவது நிச்சயம், அதைப் போன்றதே நன்றி அறியாத அற்பர்களுக்கு நாம் செய்யும் உதவியும். கல்லின் மேல் எறியப்பட்ட பானையைப் போல அந்த உதவியும் நம்மையே உடன் அழித்து விடும்

வெண்பா : 16

அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்

கடக்கக் கருதவும் வேண்டா – மடைத் தலையில்

ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்

வாடி இருக்குமாம் கொக்கு.

விளக்கம்

நீர் பாயும் தலை மடையில் பல சிறு மீன்கள் ஓடிக் கொண்டிருந்தாலும், கொக்கு வாடியிருப்பதைப் போலக் காத்துக் கொண்டிருக்கும். எது வரை? தனக்குரிய பெரிய மீன் வரும் வரை. அதைப் போலவே அறிஞர்களின் அடக்கமும். அதைக் கண்டு அவர்களை அலக்ஷ்யம் செய்து வென்று விட நினைக்கக்கூடாது

வெண்பா : 17

அற்ற குளத்தில் அறு நீர்ப்பறவை போல்

உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் அக்குளத்தில்

கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே

ஒட்டி உறுவார் உறவு

விளக்கம்

குளத்தில் நீர் வற்றிய உடன் விலகிச் செல்லும் பறவைகள் போல, நமக்குத் துன்பம் வந்தபோது நம்மை விட்டு விலகிச் செல்பவர்கள் உறவினர் அல்லர். அந்தக் குளத்திலேயே அப்போதும் சேர்ந்து வாடும் கொட்டி, அல்லி, நெய்தல் கொடிகளைப் போல, நம்முடனேயே நம் துன்பங்களையும் பகிர்ந்து கொள்பவர்களே நம் உறவு.

வெண்பா : 18

சீரியர் கெட்டாலும் சீரியரே, சீரியர் மற்(று)

அல்லாதார் கெட்டால் அங் கென்னாகும்? – சீரிய

பொன்னின் குடம்உடைந்தால் பொன்னாகும் என்னாகும்

மண்ணின் குடம் உடைந்தக் கால்.

விளக்கம்

தங்கத்தால் ஆன பானை உடைந்து சிதறினால், அதன் சிதறலும் தங்கமே. ஆனால் மண்பானை உடைந்து போனால்? அதைப் போன்றதே சிறந்த பண்புடையவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உண்டாகும் தாழ்வும்.

வெண்பா : 19

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்

நாழி முகவாது நானாழி - தோழி

நிதியும் கணவனும் நேர் படினும் தம்தம்

விதியின் பயனே பயன்.

விளக்கம்

தோழி! எவ்வளவு தான் அமுக்கி, பெரும் கடலிலே முகந்தாலும், ஒரு நாழி (படி) அளவுள்ள பாத்ரம் நான்கு படி நீரை முகவாது. நல்ல கணவனும், செல்வமும் நிறைந்திருந்தும் நமக்குக் கிடைக்கும் சுகத்தின் அளவும் அதைப் போன்றதே. அது நம் முன் ஜன்ம நல் வினைகளின் அளவைப் பொறுத்தது.

வெண்பா : 20

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா

உடன்பிறந்தே கொல்லும் வியாதி – உடன் பிறவா

மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்

அம்மருந்து போல்வாரும் உண்டு.

விளக்கம்

வ்யாதி நம்முடனேயே பிறந்து நம்மைக் கொன்று விடுகிறது. எனவே உடன் பிறந்தோர் எல்லாரையும் நம் உறவு என்று நினைக்க முடியாது. உடன் பிறக்காது எங்கோ பெரிய மலையில் இருக்கும் மருந்து நம் வயாதியைத் தீர்ப்பது போல, அன்னியரும் நமக்கு நன்மை தருபவராக இருக்கக் கூடும்.

வெண்பா : 21

இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை

இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்

வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்

புலி கிடந்த தூறாய் விடும்.

விளக்கம்

நல்ல மனைவி மட்டும் அமைந்து விட்டால் அந்த இல்லத்தில் இல்லாதது என்று எதுவுமே இல்லை. ஆனால் அந்த இல்லாள் (மனைவி) குணமில்லாதவளாக (இல்லாள்) இருந்து விட்டாலோ, கடுமையான எதிர் வார்த்தைகள் பேசி விட்டாலோ அந்த இல்லம் புலியின் குகை போலாகி விடும்.

வெண்பா : 22

எழுதியவா றேகாண் இரங்கு மடநெஞ்சே

கருதியவா றாமோ கருமம் – கருதிப்போய்க்

கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்

முற்பவத்தில் செய்த வினை.

விளக்கம்

மட நெஞ்சே! திட்டத்தோடு கற்பக மரத்திடம் சென்றாலும், எட்டிக்காயே கிடைத்ததென்றால் அது நம் முன் வினைப் பயனே. விதியில் எழுதியுள்ளபடிதான் நமக்குக் கிடைக்குமே அல்லாது நாம் நினைப்பதெல்லாமா நடந்து விடும்?

வெண்பா : 23

கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடும் சினத்துப்

பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வாரே - வில்பிடித்து

நீர் கிழிய எய்த வடுப் போல மாறுமே

சீர் ஒழுகு சான்றோர் சினம்

விளக்கம்

சிறு வேறுபாடு வந்தாலே தாழ்ந்தோர் பிளந்து போட்ட கல்லைப் போலப் பிரிந்து விடுவர். பெரும் சினத்தால் பிரிந்தாலும் பெரியோர், பிளந்த தங்கத்தைப் போல மீண்டும் சேர்ந்து விடுவர். அவர்கள் கோபம், ஒருவர் எய்த அம்பால் நீரில் உண்டான வடுவைப் போன்றதே

வெண்பா : 24

நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்தாற்போல்

கற்றாரைக் கற்றாரே காமுறுவர் – கற்பிலா

மூர்க்கரை மூர்க்கரே முகப்பர் முதுகாட்டில்

காக்கை உகக்கும் பிணம்.

விளக்கம்

குளத்தில் பூத்திருக்கும் தாமரையை அன்னப்பறவை சேர்ந்தது போல கற்றவர்களைக் கற்றவர்களே விரும்பிச் சேர்வர். சுடுகாட்டில் பிணத்தைக் காக்கைச் சேர்வது போல, கல்வி அறிவில்லாத மூடரை, மூடர்களே சேர்வர்

வெண்பா : 25

நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்

அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு - நெஞ்சில்

கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்

கரவிலா நெஞ்சத் தவர்.

விளக்கம்

தன்னிடம் விஷமிருப்பதை அறிந்து நாகப்பாம்பு மறைந்து வாழும். விஷமில்லாத தண்ணீர்ப் பாம்போ பயமில்லாது எங்கும் வெளியில் திரிந்து கொண்டிருக்கும். அதைப் போலவே நெஞ்சில் குற்றம் உடையவர்களும் அதை மறைத்தே வாழ்ந்து கொண்டிருப்பர், குற்றமில்லாதவர்களோ கபடமின்றி வெளியில் திரிந்து கொண்டிருப்பர்

வெண்பா : 26

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்

மன்னனில் கற்றோன் சிறப்புடையன் – மன்னர்க்குத்

தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோற்குச்

சென்றஇடம் எல்லாம் சிறப்பு.

விளக்கம்

ஒப்பிட்டு பார்க்கும் போது, அரசனை விட, கசடறக் கற்றவனே மேலானவன். ஏனென்றால், அரசனுக்கு அவன் தேசத்தைத் தவிர வேறெங்கும் சிறப்பு இல்லை. ஆனால் கற்றவனுக்கோ அவன் செல்லுமிடமில்லாம் சிறப்பு.

வெண்பா : 27

கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்

அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிய

வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே

இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்

விளக்கம்

கற்றறிந்தவர் வார்த்தை கற்காதவர்களுக்கு துன்பத்தைத் தரும். தர்மம் தீயவர்களைத் அழிக்கும், மெல்லிய வாழைக்கு அதன் கன்று அழிவைத் தரும். வாழ்க்கைக்குப் பொருந்தி நடக்காத மனைவி அந்த வீட்டிற்கு அழிவைத் தருவாள்.

வெண்பா : 28

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்

கந்தம் குறைபடா தாதலால் – தம்தம்

தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கெட்டால்

மனம்சிறியர் ஆவரோ மற்று.

விளக்கம்

தேய்ந்து மெலிந்திருந்தாலும் சந்தனம் மணம் குறைவதில்லை. அதைப் போலவே தாராள குணம் படைத்த அரசர்களும் தன் பொக்கிஷம் குறைந்த காலத்தும் மனம் மாறுவதில்லை

வெண்பா : 29

மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல

உருவும் உயர் குலமும் எல்லாம் - திரு மடந்தை

ஆம் போது அவளோடும் ஆகும் அவள் பிரிந்து

போம் போது அவளோடும் போம்

விளக்கம்

ஒருவனைச் சூழ்ந்து வாழும் இனிய சுற்றமும், அவனுடைய பெரும் செல்வமும், அவன் அழகும், அவன் குலப் பெருமையும் லக்ஷ்மி கடாக்ஷம் ஒருவனுக்கு இருக்கும் வரையில் தான். அவள் அகலும் போது இவையனைத்தும் போய் விடும்

வெண்பா : 30

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம்அவரை

ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் – மாந்தர்

குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து

மறைக்குமாம் கண்டீர் மரம்.

விளக்கம்

தன்னை வெட்டுபவனுக்கும் நிழலைத் தந்து காக்கும் மரத்தைப் போல, அறிவுடையார் அவர்தம் உயிருக்கே தீங்கு செய்பவனையும் இயன்ற வரைக் காக்கவே செய்வர்.

# ஆத்திசூடி

**(ஔவையார், பாரதியார், பாரதிதாசன், சிற்பி பாலசுப்பிரமணியம்)**

- **தமிழ்ச் சமுதாயம் நல்லொழுக்கத்திற்கு முக்கியத்துவம் அளித்ததை உணர்த்துகிறது.**
- **புதிய ஆத்திச்சூடியில் தொடக்கமாகவே அச்சத்தை தவிக்கும்படி பாரதி நமக்கு அறிவுறுத்தி இருக்கிறார்**
  **உலகுக்கு ஒரே ஒரு தனி ஆட்சி ஏற்பட வேண்டும். என்ற கருத்தில் பாரதிதாசன் ஆத்திச்சூடியை இயற்றியிருக்கிறார்.**
- **சிறுவர்கள் இளம் வயதிலேயே மனனம் செய்து மனதில் நிறுத்திக் கொள்ளும் வகையில் எளிமையாக அமைந்திருக்கிறது ஆத்திச்சூடி.**
- **தமிழ் கற்கும் போது தமிழின் உயிர்எழுத்துக்களை சொல்லித் தருகின்ற பொருட்டுஔவையார் முதல் சிற்பி வரை உள்ள ஆத்திச்சூடி,இலக்கிய வகைஅமைந்திருக்கின்றது**

## ஔவையார்

1.அறம் செய விரும்ப - நீ தருமத்தை(கடமையை)ச் செய்ய ஆவல் கொள்.

2. ஆறுவது சினம் - கோபம் தணிக்கப்பட வேண்டியதாகும்.

3. இயல்வது கரவேல் - உன்னால் கொடுக்கக்கூடிய பொருளை யாசிப்பவர்க்கு ஒளிக்காது கொடு.

4. ஈவது விலக்கேல் - ஒருவர் மற்றவர்க்கு கொடுப்பதை, வேண்டாமென்று தடுக்காதே.

5.உடையது விளம்பேல்- உன்னிடத்திலுள்ள பொருளை அல்லது இரகசியங்களை பிறர் அறியுமாறு சொல்லாதே.

6. ஊக்கமது கைவிடேல்- எப்போதும் முயற்சியைக் கைவிடக்கூடாது.

7. எண் எழுத்து இகழேல்- கணித, இலக்கண நூல்களைத் தினமும் தவறாமல் நன்கு கற்க வேண்டும்.

8. ஏற்பது இகழ்ச்சி- இரந்து வாழ்வது இழிவானது. அதனால் யாசிக்கக் கூடாது.

9. ஐயம் இட்டு உண்- யாசிப்பவர்கட்கு பிச்சையிட்டுப் பிறகு உண்ண வேண்டும்.

10. ஒப்புரவு ஒழுகு- உலக நடையை அறிந்துகொண்டு, அத்தோடு பொருந்துமாறு நடந்துகொள்.

11. ஓதுவது ஒழியேல் -நல்ல நூல்களை எப்பொழுதும் படித்துக்கொண்டிரு.

12. ஔவியம் பேசேல் -ஒருவரிடமும் பொறாமை கொண்டு பேசாதே.

13.அ∴கஞ் சுருக்கேல்- அதிக இலாபத்துக்காக, தானியங்களை குறைத்து அளந்து விற்காதே.

14.கண்டொன்று சொல்லேல்-. கண்ணாற் கண்டதற்கு மாறாகப்(பொய் சாட்சி) சொல்லாதே.

15.ஙப் போல் வளை -. “ங“ என்னும் எழுத்தானது எப்படி தான் பயன்னுள்ளதாக இருந்து தன் வருக்க எழுதுக்களை தழுவுகிறதோ அது போல நாமும் நம்மைச் சார்ந்தவர்களால் என்ன பயன் என்று பாராமல் அவர்களை காக்க வேண்டும்.”ங” என்னும் எழுத்தை கூர்ந்து நோக்கினால், ஒருவர் வளைந்து வணக்கம் சொல்வது போல் உள்ளது விளங்கும். அதைப்போல பணிவாக பெரியவர் முன் வளைய வேண்டும் என்று ஔவை உரைத்ததாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

16.சனி நீராடு -.சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கவும்.

17.ஞயம்பட உரை- கேட்பவருக்கு இன்பம் உண்டாகும் படி இனிமையாக பேசு.

18.இடம்பட வீடு எடேல்-உன் தேவைக்கு மேல் வீட்டை பெரிதாக கட்டாதே.

19.இணக்கம் அறிந்து இணங்கு -ஒருவரிடம் நட்பு கொள்ளும் முன்,அவர் நல்ல குணங்களும்,நல்ல செய்கைகளும் கொண்டவரா எனத் தெரிந்த பிறகு அவருடன் நட்பு கொள்ளவும்.

20.தந்தை தாய்ப் பேண் -உன் தந்தையையும் தாயையும் அவர்களுடைய முதுமைக் காலம் வரை அன்புடன் காப்பாற்று.

21.நன்றி மறவேல் - ஒருவர் உனக்கு செய்த உதவியை ஒரு போதும் மறவாதே.

22.பருவத்தே பயிர் செய் - எச்செயலையும் அதற்குரிய காலத்திலேயே செய்ய வேண்டும்.

23.மண் பறித்து உண்ணேல் -பிறர் நிலத்தை திருடி அதன் மூலம் வாழாதே (அல்லது) நீதி மன்றத்தில் இருந்து கொண்டே லஞ்சம் வாங்கிக்கொண்டு தீர்ப்பு வழங்காதே (என்றும் பொருள் கொள்ளலாம்)

24.இயல்பு அலாதன செய்யேல் - நல்லொழுக்கத்துக்கு மாறான செயல்களைச் செய்யாதே.

25.அரவம் ஆட்டேல். -பாம்புகளை பிடித்து விளையாடாதே.

26.இலவம் பஞ்சில் துயில் -இலவம் பஞ்சு“ எனும் ஒரு வகை பஞ்சினால் செய்யப்பட்ட படுக்கையிலே உறங்கு.

27.வஞ்சகம் பேசேல் -படச்(உண்மைக்கு புறம்பான,கவர்ச்சிகரமான) சொற்களை பேசாதே.

28.அழகு அலாதன செய்யேல் -.இழிவான செயல்களை செய்யாதே

29.இளமையில் கல்- இளமை பருவத்தில் இருந்தே கற்கவேண்டியவைகளை (இலக்கணத்தையும், கணிதத்தையும்) தவறாமல் கற்றுக்கொள்.

30.அறனை மறவேல். தருமத்தை எப்போதும் மறவாமல் செய்.

31.அனந்தல் ஆடேல்- மிகுதியாக துங்காதே.

32.கடிவது மற-யாரையும் கோபத்தில் கடிந்து பேசிவிடாதே.

33.காப்பது விரதம்- தான் செய்யத் தொடங்கிய தருமத்தை விடாமல் செய்வதே விரதமாகும் (அல்லது) பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமல் அவற்றைக் காப்பாற்றுவதே தவம் ஆகும்.

34.கிழமை பட வாழ்-உன் உடலாலும் பொருளாலும் பிறருக்கு நன்மை செய்து வாழ.

35. கீழ்மை யகற்று-இழிவான குணஞ் செயல்களை நீக்கு.

36. குணமது கைவிடேல்- நன்மை தரக்கூடிய நல்ல குணங்களை பின்பற்றுவதை நிறுத்திவிடாதே(கைவிடேல்).

37. கூடிப் பிரியேல்- நல்லவரோடு நட்பு செய்து பின் அவரை பிரியாதே.

38. கெடுப்ப தொழி -பிறருக்கு கேடு விளைவிக்கும் செயல்களை செய்யாதே.

39. கேள்வி முயல்-கற்றவர் சொல்லும் நூற் பொருளை கேட்பதற்கு முயர்சி செய்.

40. கைவினை கரவேல்-உங்களுக்கு தெரிந்த கைத்தொழிலை மற்றவர்களிடமிருந்து ஒளியாமற் செய்து கொண்டிருக்கவும்.

41. கொள்ளை விரும்பேல்- பிறர் பொருளை திருடுவதர்க்கு ஆசைப்படாதே.

42. கோதாட் டொழி-குற்றமான விளையாட்டை விட்டு விடு (நீக்கு).

43.கௌவை அகற்று-வாழ்வில் செயற்கையாக ஏற்படும் துன்பத்தை நீக்க.

44. சக்கர நெறி நில்- அரசன் வகுத்த நெறிப்படி வாழ வேண்டும். ( அரசன் ஸ்ரீ ஆள்பவர், தலைவர் ).

45.சான்றோ ரினத்திரு-அறிவொழுக்கங்ளில் நிறைந்த பெரியோர்களுடன் சேர்ந்து இரு.

46. சித்திரம் பேசேல்- பொய்யான வார்தைகளை மெய் போல்ப் பேசாதே.

47. சீர்மை மறவேல்- புகழுக்குக் காரணமான நல்ல குணங்களை மறந்து விடாதே.

48. சுளிக்கச் சொல்லேல்-கேட்பவருக்குக் கோபமும் வெறுப்பும் உண்டாகும் படி பேசாதீர்.

49. சூது விரும்பேல்- ஒருபொதும் சூதாட்டத்தை விரும்பாதே.

50. செய்வன திருந்தச் செய்- செய்யும் செயல்களை தவறோ குறையோ ஏதும் இல்லாமல் செய்யவும்.

51.சேரிடமறிந்து சேர்-நீ பழகும் நபர்கள் நல்ல குணங்கள் உடயவர்களா என நன்கு ஆராய்ந்து பின்பு அவர்களுடன் பழகு.

52. சையெனத் திரியேல்-பெரியோர் “சீ“ என வெறுக்கும் படி வீணாய்த் திரியாதே.

53. சொற்சோர்வு படேல்- பிறருடன் பேசும் பொழுது மறந்தும் குற்றமுண்டாகப் பேசாதே.

54. சோம்பித் திரியேல்-முயற்சியின்றிச் சோம்பேறியாகத் திரியாதே.

55. தக்கோ னெனத்திரி-பெரியோர்கள் உன்னைத் தக்கவன்(யோக்கியன்,நல்லவன்) என்று புகழும்படி நடந்துக்கொள்.

56. தானமது விரும்பு-யாசிப்பவர்களுக்கு தானம் செய்.

57. திருமாலுக்கு அடிமை செய்-நாராயணமூர்த்திக்கு தொண்டு செய்.

58. தீவினை யகற்று-பாவச் செயல்களைச் செய்யாமல் இரு.

59.துன்பத்திற் கிடங்கொடேல்-முயற்சி செய்யும் பொழுது வரும் உடம்பின் வருத்தத்திற்கு அஞ்சி அதனை விட்டு விடாதே.

60. தூக்கி வினைசெய்-ஒரு வேளையை முடிப்பதற்க்கான் வழிமுறைகளை நன்கு ஆராயிந்து அறிந்து பின்பு அச்செயலை செய்யத தொடங்கவும்.

61. தெய்வ மிகழேல்-கடவுளை பழிக்காதே.

62. தேசத்தோ டொத்துவாழ்- உன் நாட்டில் வசிக்கும் மக்களுடன் பகை இல்லாமல் வாழ்.

63. தையல்சொல் கேளேல்-மனைவி சொல் கேட்டு ஆராயாமல் நடவாதே.

64. தொன்மை மறவேல்- பழமையாகிய நட்பினை மறந்துவிடாதே.

65. தோற்பன தொடரேல்-ஒரு செயலைச் செய்தால் தோல்வியில் தான் முடியும் எனத் தெரிந்தே அதை தொடங்காதே.

66. நன்மை கடைப்பிடி-நல்வினை செய்தலை எவ்வளவு இடையுறு வந்தாலும் உறுதியாகத் தொடரவும்.

67. நாடொப் பனசெய்- நாட்டில் உள்ள பலரும் ஒத்துக்கொள்ளத்தக்க நல்ல காரியங்களை செய்.

68. நிலையிற் பிரியேல்-உன்னுடைய நல்ல நிலையில் இருந்து என்றும் தாழ்ந்து விடாதே.

69. நீர்விளை யாடேல்-வெள்ளத்தில் நீந்தி விளையாடாதே.

70. நுண்மை நுகரேல்-நோயைத் தரும் சிற்றுண்டிகளை அதிகமாக உண்ணாதே.

71. நூல்பல கல்- அறிவை வளர்க்கும் பல நூல்களைப் படி.

72.நெற்பயிர் விளை- நெற்பயிரை விளையச் செய்வதை உன் வாழ்க்கை தொழிலாகக் கொண்டு வாழ்.

73. நேர்பட வொழுக- ஒழுக்கந் தவறாமல் நேர்வழியில் நட.

74. நைவினை நணுகேல்-பிறர் வருந்தத் தகுந்த தீ வினைகளைச் செய்யாதே.

75. நொய்ய வுரையேல்-பயன் இல்லாத அற்ப வார்த்தைகளைப் பேசாதே.

76. நோய்க்கிடங் கொடேல்-மிகுந்த உணவு உறக்கம் முதலியவற்றால் நோய்க்கு வழிவகை செய்யாதே.

77. பழிப்பன பகரேல்-பெறியோர்களால் பழிக்கப்படும் இழிவான சொற்களான பொய்,கடுஞ்சொல் ஆகியவற்றை பேசாதே.

78. பாம்பொடு பழகேல்-பாம்புபோல கொடிய குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே.

79. பிழைபடச் சொல்லேல்-குற்றம் உண்டாகும் படி எதையும் பேசாதே.

80. பீடு பெறநில்-பெறுமையை அடையும் படியான நல்ல நிலையிலே நில்.

81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்-உன்னையே நம்பியவர்களை காப்பாற்றி வாழ்.

82. பூமி திருத்தியுண்-விளைநிலத்தை உழுது அதில் பயிர்செய்து உண்.(அ)விவசாயத்தை வாழ்க்கை தொழிலாகக் கொள்.

83. பெரியாரைத் துணைக்கொள்-அறிவிலே சிறந்த பெரியோர்களை உனக்குத் துணையாகப் பேணிக்கொள்.

84. பேதைமை யகற்று-அறியாமையை போக்க.

85. பையலோ டிணங்கேல்-அறிவில்லாத சிறுவனோடு கூடித் திரியாதே.

86. பொருடனைப் போற்றிவாழ்-பொருள்களை(செல்வம் உட்பட)வீண் செலவு செய்யாமற் பாதுகாத்து வாழ்.

87. போர்த்தொழில் புரியேல்-யாருடனும் தேவையில்லாமல் சண்டை பொடுவதை ஒரு வேலையாக செய்யாதே.

88. மனந்தடு மாறேல்-எதனாலும் மனக்கலக்கம் அடையாதே.

89. மாற்றானுக் கிடங்கொடேல்-பகைவன் உன்னை துன்புறுத்தி உன்னை வெல்வதற்க்கு இடம் கொடுக்காதே.

90. மிகைபடச் சொல்லேல்- சாதாரணமான விஷயத்தை மாயாஜால வார்தைகளால் பெரிதாகக் கூறாதே.

91. மீதூண் விரும்பேல்-மிகுதியாக உண்ணுதலை விரும்பாதே.

92. முனைமுகத்து நில்லேல்- எப்போதும் யாருடனாவது சண்டையிடுவதற்காக போர் முனையிலே நிற்காதே.

93. மூர்க்கரோ டிணங்கேல்- மூர்க்க குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே.

94. மெல்லினல்லாள் தோள்சேர்-பிற மாதரை விரும்பாமல் உன் மனைவியுடன் மட்டும் சேர்ந்து வாழ்.

95. மேன்மக்கள் சொற்கேள்-நல்லொழுக்கம் உடைய பெரியோர் சொல்லைக் கேட்டு நட.

96. மைவிழியார் மனையகல்- விலைமாந்தர் உடன் உறவு கொள்ளாமல் விலகி நில்.

97. மொழிவ தறமொழி-சொல்லப் படும் பொருளை சந்தேகம் நீங்கும் படி சொல்.

98.மோகத்தை முனி-நிலையில்லாத பொருள்களின் மேலுள்ள ஆசையை வெறுத்திடு.

99. வல்லமை பேசேல்-உன்னுடைய சாமர்தியத்தை நீயே புகழ்ந்து பேசாதே.

100. வாதுமுற் கூறேல்-பெறியோர்கள் இடத்தில் முறன் பட்டு வாதிடாதே.

101. வித்தை விரும்பு- கல்வியாகிய நற்பொருளை விரும்பு.

102. வீடு பெறநில்-முக்தியை பெறுவதற்க்கான சன்மார்கத்திலே வாழ்க்கையை நடத்து.

103. உத்தமனாய் இரு-உயர்ந்த குணங்கள் கொண்டவனாக் வாழு.

104. ஊருடன் கூடிவாழ்-ஊராருடன் நன்மை தீமைகளில் கலந்து வாழ்.

105. வெட்டெனப் பேசேல்-யாருடனும் கத்தி வெட்டுப் போலக் கடினமாக பேசாதே.

106. வேண்டி வினைசெயேல்- வேண்டுமென்றே தீய செயல்களைச் செய்யாதே.

107. வைகறை துயிலெழு- நாள்தோறும் சூரியன் உதிக்கும் முன்பே தூக்கத்தில் இருந்து எழுந்திரு.

108. ஒன்னாரைத் தேறேல்-பகைவர்களை நம்பாதே.

109. ஓரஞ் சொல்லேல்-எந்த வழக்கிலும் ஒருபுடைச் சார்பாக பேசாமல் நடுநிலையுடன் பேசு.

## புதிய ஆத்திச்சூடி (பாரதியார்)

1. அச்சம் தவிர்

யாருக்கும், எதற்கும், எந்த சூழ்நிலையிலும் பயம் கொள்ளாதே.

2.ஆண்மைதவறேல்

ஆணுக்கே உரிய பொறுப்புகளில் இருந்தும் பண்புகளில் இருந்தும் தவறி நடக்காதே. தேவையறிந்த இடத்தில் உனது வீரத்தையும், துணிவையும் கம்பீரத்தையும் வெளிப்படுத்த தவறிவிடாதே.

3. இளைத்தல் இகழ்ச்சி

சோர்வடைதல் இகழ்ச்சியை தேடி தரும். எந்த ஒரு செயலையும் சுறுசுறுப்பாக செய்து முடி.

4.ஈகை திறன்

வறியவர்க்கு கொடுத்து உதவும் பண்பை வளர்த்து கொள்.

5. உடலினை உறுதி செய்

உடம்பை திடமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்து கொள்.

6. ஊண்மிக விரும்பு

உணவு பெருக விருப்பம் கொள்.இது, உணவு உண்பதை விருப்பம் கொள் என்று தவறான கோணத்திலும் பார்க்கப்படுகிறது.,

7.எண்ணுவது உயர்வு

எண்ணங்கள் அனைத்தும் உயர்வாகவே இருக்க வேண்டும்.

8. ஏறு போல் நட

சிங்கம் போல் மிடுக்காக கம்பீரமாக நேர்கொண்ட பார்வையோடு நடந்து செல்.

ஏறு - சிங்கம், காளை

9. ஐம்பொறி ஆட்சி கொள்

தன்னுடைய ஐம்பொறிகளான, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றின் ஐம்புலன்களாகிய உணர்தல், சுவைத்தல், பார்த்தல், நுகர்தல், கேட்டல் ஆகியவற்றை தன்னுள் கட்டுப்படுத்தி ஆட்சி கொள்ள வேண்டும்.

10. ஒற்றுமை வலிமையாம்

ஒற்றுமையுடன் செயல்பட்டால் அனைத்து செயல்களும் வெற்றியில் முடியும்.அனைத்து மனிதர்களுக்கும் ஒரே வகையான சிந்தனை இல்லாமல் இருப்பினும், வேறு வேறு சிந்தனையிலும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.

11. ஓய்த லொழி

சோம்பலை நீக்கு. சோர்வு ஒருவனுக்கு அழிவை தேடி தரும் ஒரு செயல் ஆகும். அத்தகைய சோம்பலை நீக்கி எந்த ஒரு செயலையும் சுறு சுறுப்பாக செய்து முடி.

12. ஔடதங் குறை

மருந்தை குறை. உன் உடலை நோய் வராமல் காத்து மருந்தை நாடுவதை குறை.

13. கற்றது ஒழுகு

கற்றதை பின்பற்று. நல்லவற்றை கற்று அதை வாழ்வில் நடைமுறைபடுத்திகொண்டு வாழ்.

14. காலம் அழியேல்

காலத்தை வீணாக்காதே. எவருக்கும் திரும்ப கிடைக்காத ஒன்று காலம் மட்டும் தான். அதை உன் வசப்படுத்தி கொண்டு வாழ்.

15. கிளைபல தாங்கேல்

பல பொறுப்புகளை உன் முதுகில் ஏற்றி சுமக்காதே. பல கிளைகளை கொண்ட ஒரு மரமானது சிறிய காற்று அடித்தாலே கிளைகள் முறிய கூடும் அல்லது மரமே சாய்ந்து விழும் நிலைமை கூட ஏற்படலாம்.

16. கீழோர்க்கு அஞ்சேல்

இழிந்த எண்ணமும், குணமும் உடையவர்கள் உங்களை விட வலிமையானவராய் இருப்பினும் அவர்களை கண்டு பயப்படாதே.

17. குன்றென நிமிர்ந்துநில்

குன்றைப் போன்று நிமிர்ந்து நில்லுங்கள். குன்று என்பது மலையை விட உயரம் குறைவானது ஆகும். மழை பெய்தால் மலையானது சரியும், ஆனால் பாறையால் ஆன குன்றானது நிமிர்ந்து நிற்கும். நீங்கள் செய்யும் தொழிலின் தகுதி மற்றவரின் தொழிலின் தகுதியை விட சற்று குறைவாக இருந்தாலும் உயரம் என்பது தொழிலின் தகுதியில் இல்லை, உங்களிடம் உள்ள நேர்மையில் உள்ளது.

18. கூடித் தொழில்செய்

ஒன்றுகூடி தொழிலில் ஈடுபடு. சிறுமுதலால் லாபம் சிறிதாகும் ஆயிரம்பேர்

உறுமுதலால் லாபம் உயருமன்றோ தோழர்களே! என்றார் பாரதிதாசன்.

19. கெடுப்பது சோர்வு.

சோர்வு நமது செயல்பாட்டைக் கெடுத்துவிடும். சோர்வடைதல் இகழ்ச்சியை தேடி தரும். எந்த ஒரு செயலையும் சுறுசுறுப்பாக செய்து முடி.

20. கேட்டிலுந் துணிந்துநில்

துன்பத்திலும், வறுமையிலும் எத்தகைய தொல்லைகள் ஏற்பட்டாலும் தைரியத்தை விடாமல் துணிந்து இரு.

21. கைத்தொழில் போற்று

கைத்தொழில் ஒன்றை கற்று கொண்டு அதை இடைவிடாமல் செய்து கொண்டு இரு.

22. கொடுமையை எதிர்த்துநில்.

குற்றங்கள் நடக்கும் இடத்தில் அதை சாட்சியாக சகித்து கொண்டு பார்க்காமல் அதனை எதிர்த்து நில்.

23. கோல்கைக் கொண்டுவாழ்

ஆளுமையின் சின்னமாக இருப்பது கோல். ஒரு மனிதன் கம்பீரத்துடனும் நேர்மையுடனும் அரசன் போல் வாழ வேண்டும்.

24. கௌவியதை விடேல்

ஒரு காரியத்தை எடுத்ததற்கு பின் அதை பாதியில் விட்டுவிடாமல் விடாமுயற்சியுடன் செய்து முடி.

25. சரித்திரத் தேர்ச்சிகொள்.

வரலாற்றில் எது சரி, எது தவறு என்று தெளிவான புரிதலுடன் படித்து தேர்ச்சி கொள்.

26. சாவதற்கு அஞ்சேல்

மரணத்தை கண்டு ஒரு போதும் பயம் கொள்ளாதே.

27. சிதையா நெஞ்சுகொள்

நெஞ்சிலே உறுதி வேண்டும். நாம் எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும் அதில் எந்தவித ஊசலாட்டமும் இருக்க கூடாது. நமக்கு ஏற்படும் துன்பங்களையும் இடையூறுகளையும் கண்டு மனம் உடையக் கூடாது.

28. சீறுவோர்ச் சீறு

யாரிடம் கோபம் கொள்ள வேண்டும் என்று தெளிவாக தெரிந்து கொண்டு அவர்களிடம் கோபப்படு.

29. சுமையினுக்கு இளைத்திடேல்

உன் பொறுப்புகளை கண்டு உன் மனம் ஒருபோதும் சோர்வடையக்கூடாது. அதை நீ தான் மனநிறைவுடன் செய்ய வேண்டும்.

30. சூரரைப் போற்று

யாருக்கும் அஞ்சாமல் எதற்கும் பயப்படாமல் மனதில் எந்தவித குழப்பமும், கலக்கமும் இன்றி தான் கொண்ட லட்சியத்திற்காக தன்னையே அர்ப்பணித்து அதில் வெற்றியும் பெற்றவர்களை நிச்சயமாக போற்ற வேண்டும்.

31. செய்வது துணிந்துசெய்

நாம் செய்யும் செயலில் எவ்வளவு இடையூறுகல் ஏற்பட்டாலும் அதனைக் கண்டு கலங்காமல் எவருக்கும் பயப்படாமல் துணிவுடன் செய்து முடி.

32. சேர்க்கை அழியேல்

நல்லனவற்றை அழித்து விடாதே. சேர்ந்து வாழும் பண்புக்கு எந்த ஊறும் விளைவிக்காதே,

33. சைகையிற் பொருளுணர்

ஒருவரின் சைகையில் பொருளுணர்ந்து அந்த வேலையே செய்து முடி.

34. சொல்வது தெளிந்துசொல்

நீ பேச விரும்பும் கருத்தினை தெளிவாக தெரிந்து கொண்டு குழப்பில்லாமல் உறுதியுடன் பேசு.

35. சோதிடந் தனையிகழ்

அறிவியல் சார்ந்து இல்லாத மூடநம்பிக்கையை தெளிவாக தெரிந்து கொண்டு சரியான முறையில் பகுத்தறிவுடன் அதனை தவறு என்று எடுத்து கூறு.

36. சௌரியந் தவறேல்

உடலை நன்றாக கவனித்து கொண்டு அனைத்து நலன்களும் கிடைக்கப்பெறுமாறு வாழ்.

37. ஞமலிபோல் வாழேல்

நாயை போல் வாழாதே. எலும்புத்துண்டுக்கு ஆசைப்பட்டு எவன் பின்னாடியும் வாலாட்டிக்கொண்டு வாழாதே. காரணமின்றி உசுப்பிவிட்ட இடத்தில் பாயாதே.

நாயை போல் எச்சில் பிழைப்பு பிழைக்காதே.

38. ஞாயிறு போற்று

எண்ணற்ற ஆற்றலை கொண்ட சூரியனை போற்றி வணங்கு.

39. ஞிமிரென இன்புறு

மலர்வண்டுகளை போல், தேனீக்களை போல் சோர்வில்லாமல் சுறுசுறுப்பாக ரீங்கார இசை மீட்டு இன்புற்று வாழ்.

40. ஞெகிழ்வது அருளின்

இளகிய மனதுடன் இருந்து, அன்போடும் பரிவோடும் கருணையோடும் எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி அனைவருக்கும் உதவிசெய்.

41. ஞேயங் காத்தல்செய்

நல்ல நட்பினையும் உறவினையும் இழந்து விடாதே.

42. தன்மை இழவேல்

உன் தனித்தன்மையையும் சுயமரியாதையினையும் இழந்து விடாதே.

43. தாழ்ந்து நடவேல்

கீழான முறையில் நடக்காதே. யாருக்கும் எதற்கும் அடிபணிந்தும் நடக்காதே.

44. திருவினை வென்றுவாழ்

அனைத்து வகையான செல்வங்களையும் பெற்று வாழ்.

45. தீயோர்க்கு அஞ்சேல்

பாதகம் செய்பவரை கண்டால் நாம் பயம் கொள்ளல் ஆகாது பாப்பா

மோதி மிதித்துவிடு பாப்பா அவர்கள் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா

46. துன்பம் மறந்திடு

துன்பத்தையே நினைத்து துவண்டு போகாதே. துன்பங்களை கண்டு அஞ்சியும் ஓடாதே. அதை தாங்கும் மனவலிமையைபெற்று அத்துன்பத்திலிருந்து வெளியே வா.

47. தூற்றுதல் ஒழி

அடுத்தவரின் குற்றங்களை கண்டு அவரை பழித்து பேசிக்கொண்டே இருக்காதே. முடிந்தால் அவரிடம் இது தவறு என்று எடுத்து கூறி சரி செய்ய பார்.

ஒருவர் இல்லாதபோது புறங்கூறுவது இழிச்செயல் ஆகும்.

48. தெய்வம் நீயென்றுஉணர்

எத்தனை கோயில்களை தேடி சென்றாலும் எத்தனை தெய்வங்களை கும்பிட்டாலும் உன் மனம் தான் தெய்வம் என்று நீ உணர்ந்துகொள்.

49. தேசத்தை காத்தல்செய்

அனைவரும் நாட்டுப்பற்றுடன் இருக்க வேண்டும். பாரத நாடு பழம்பெரும் நாடு நீர் அதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர் என்று பாடியிருப்பார். நமது நாட்டின் புகழ்களையும் பெருமைகளையும் அந்நியரிடம் கொடுத்துவிடாதே.

50. தையலை உயர்வுசெய்

பெண்களின் நிலையை உயர்த்த வேண்டும். ஆண்களும் பெண்களும் சரிநிகராக வாழ வேண்டும். பெண்களின் அறிவை வளர்த்தால் உலகில் பேதைமை நீங்கிடுமே என்று பாடினார்.

51. தொன்மைக்கு அஞ்சேல்

நவீன காலத்திற்கு ஒப்பில்லாத பழைய பழக்கவழக்கங்களை நிராகரிப்பதில் எந்த ஒரு அச்சஉணர்வும் வேண்டாம்.

52. தோல்வியிற் கலங்கேல்

தோல்வியை கண்டு ஒருபோதும் கலங்கிவிடாதே. தோல்வியை கண்டு மனமுடைந்து முயற்சி செய்வதை நிறுத்திவிடாதே. வெற்றியில் களிப்பும் தோல்வியில் கலக்கமும் கூடாது.

53. தவத்தினை நிதம்புரி

அன்பையும், உதவி செய்யும் குணத்தினையும் ஒருபொழுதும் விட்டுவிடாமல் தொடர்ந்து செய்து கொண்டு இரு. வையகத்தில் அன்பில் சிறந்த தவமும் இல்லை, அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு என்று பாடினார் பாரதி.

54. நன்று கருது

நல்லவற்றையே எண்ணல் வேண்டும். எண்ணிய எண்ணம் போல் வாழ்க்கை நடக்கும்.

55. நாளெல்லாம் வினைசெய்

நிதமும் ஏதாவது செய்து கொண்டே இரு. பூமி தன்னை சுற்றிக்கொள்வதை நிறுத்துவதுமில்லை, அலைகடல் ஓய்ந்து சாய்வதும் இல்லை. வீணாக வெட்டிப்பொழுது கழித்து சோம்பேறியாகாதே

56. நினைப்பது முடியும்

நன்று கருது, நாளெல்லாம் வினைசெய், நினைப்பது முடியும். நல்லவற்றையே திட்டமிட்டு எண்ணி தினமும் அதற்கான உழைப்பை இட்டால் நினைப்பது கண்டிபாக முடியும்.

57. நீதிநூல் பயில்

அறம் சார்ந்த போக்கில் உள்ள நீதி நூல்களை படி. நீதி, உயர்ந்த மதி, கல்வி, அன்பு நிறைய உடையவர்கள் மேலோர் என்று பாப்பா பாட்டில் கூறியிருப்பார்.

58. நுனியளவு செல்

எந்த செயலை எடுத்துக்கொண்டாலும் அதனின் எல்லை வரை செல். முழுமையாக எந்த காரியத்தையும் முடித்துவிடு

59. நூலினை பகுத்துணர்

தெளிவான சிந்தனையுடன் நூல்களை படித்து பகுத்து உணர்ந்து கொள்.

60. நெற்றி சுருக்கிடேல்

அனாவசிய எரிச்சல், கோபம், பொறாமை

கொள்ளாதே.எவ்வளவு துயரங்கள் இருப்பினும் முகமலர்ச்சியுடன் இரு.

61. நேர்படப் பேசு

மனதில் கள்ளம் கபடம் கொண்டு உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாதே.

நேர்படப் பேசு. மிகைப்படக்கூறல், கூறியவைகூறல் எதுவும் கூடாது.

62. நையப் புடை

மனதில் உள்ள தீய எண்ணங்களை முழுமையாக அகற்று. எந்த ஒரு செயலையும் அரைகுறையாக முடிக்காதே.

63. நொந்தது சாகும்

எவ்வளவு துயரங்கள் இருப்பினும் மனச்சோர்வு அடைந்துவிடாதே. மனச்சோர்வு அடைந்தவர்கள் அழிந்து போவார்கள்.

64. நோற்பது கைவிடேல்

நோற்பது என்றல் விரதம் இருப்பது என்று பொருள்படும். ஒழுக்கம் சார்ந்த நெறியை, மனஉறுதியை, அன்பு செலுத்துவதை ஒருபோதும் கைவிட்டு விடாதே.

65. பணத்தினைப் பெருக்கு

பணத்தினை அதிகமாக்கு. பணத்தினை நல்ல வழியில் சேர்த்து அதனை உனக்கும், மற்றவர்களுக்கும் பயன்படுமாறு செய்.

66. பாட்டினில் அன்புசெய்

அன்பு தான் அனைத்திற்கும் முதன்மையானது. இசை இல்லாமல் வாழ்க்கையில் எந்த ஒரு செயலையும் வகைப்படுத்த இயலாது. இசையையும், வரிகளையும் அன்பு மிகுந்தவாறு இயற்று.

67. பிணத்தினைப் போற்றேல்

கடந்த காலத்தை எண்ணி அதிகம் பெருமைபட்டு கொள்ளாதே. எதிர்காலம் அதை நினைத்தே சென்றுவிடும். உணர்வுகள் இல்லாத மனிதரை மதிக்காதே.

68. பீழைக்கு இடங்கொடேல்

துன்பத்திற்கு ஒருபோதும் இடம்கொடுக்காதே. துன்பத்தை நினைத்துக்கொண்டே இருப்பதால் மேலும் அது மனதை வலுவிழக்கச் செய்யும். துன்பத்தை சற்று தள்ளிவைத்து அதனை தூக்கி எறிந்துவிடு.

69. புதியன விரும்பு

முற்காலத்தின் நடைமுறைகளை நடப்பாண்டுடன் ஒப்பிட்டு குழம்பி கொள்ளாமல் புதியனவற்றை உருவாக்கு.

70. பூமி இழந்திடேல்

இயற்கையை அழித்துவிடாதே. நீயும் அழிந்து போவாய். பத்து மாதம் உன்னை வயிற்றில் சுமக்கும் உன் தாய்க்கு நீ வாழ்நாள் முழுதும் கடமைப்பட்டிருக்கிறாய். உன் வாழ்நாள் முழுதும், நீ அழிந்து போன பிறகும் உன்னை சுமக்கும் இந்த பூமிக்கு ஏதாவது செய்துவிட்டு செல்.

71. பெரிதினும் பெரிதுகேள்

நினைப்பது அனைத்தும் பெரிய இலக்காகவே இருக்கவேண்டும். கனவுகாண்பதில் கஞ்சத்தனம் வேண்டாம். அது உனக்கு கிடைக்காவிட்டாலும் உன் நினைப்பை கைவிட்டுவிடாதே. அதற்கு நீ செய்த முயற்சி உன்னை ஒருபோதும் தளரவிடாது.

72. பேய்களுக்கு அஞ்சேல்

நமது மனதிற்குள் உள்ள பொய்மையுள்ள எதிர்மறையான கருத்துக்களைக் கண்டு பயப்படாதே. அதனை தூக்கி எறிந்துவிடு. மனதில் பொய்மையையும், கொடூர குணத்தையும் உடைய மனித பேய்களை கண்டு அஞ்சிவிடாதே.

73. பொய்மை இகழ்

பொய்யான கருத்துகளை தெளிவான பகுத்தறிவுடன் கண்டறிந்து அதனை இகழ்ந்து பேசி நீக்கிவிடு. பொய்பேசல் கூடாது.

74. போர்த்தொழில் பழகு

தற்காப்புக்கலைகளை கட்டாயம் கற்றுக்கொள். அது உன் உடல்வலிமையையும், மனவலிமையும் சீராக வைக்கும்.

75. மந்திரம் வலிமை

மாற்றத்தையும், நம்பிக்கையையும் கொண்டு உள்ளத்தில் உருவாகும் நல்ல எண்ணங்களால் பேசப்படும் அனைத்து வார்த்தைகளும் வலிமையுடையது ஆகும்.

76. மானம் போற்று

தன்னிலை தாழ்ந்து எவரிடமும் நடக்காதே. கொடுப்பது புண்ணியம் என்றாலும் ஏற்பது இகழ்ச்சி ஆகும்.

77. மிடிமையில் அழிந்திடேல்

வறுமையினால் அழிந்துவிடாதே. ஏழ்மை காரணத்தினால் உன் வாழ்க்கையை இழந்துவிடாதே. இறுதிவரை ஏழையாகவே இருந்துவிடாதே.

78. மீளுமாறு உணர்ந்துகொள்

அழிவை ஏற்படுத்தும் சோர்விலிருந்தும், சூழ்ச்சியிலிருந்தும் மீளுமாறு உணர்ந்துகொள்

79. முனையிலே முகத்துநில்

எந்த ஒரு செயலிலும் தொடக்கத்திலிருந்தே முனைப்புடன் இருக்க பழகிக்கொள். முடிவதற்குள் முடித்துவிடலாம் என்று அசாதாரணமாக இருக்காதே.

80. மூப்பினுக்கு இடங்கோடேல்

வயதான பிறகு உடல் தளர்ச்சியையும் அதிக நோயையும் சம்பாதித்துவிடாதே. வயதானாலும் உடலை கட்டுக்கோப்புடன் வைத்திரு.

81. மெல்லத் தெரிந்துசொல்

எந்த ஒரு கருத்தை முன்வைப்பதற்கு முன்னும் அதை தெளிவாக தெரிந்து கொண்டு அதன் முழு வரலாற்றையும் அறிந்து கொண்டு பேசு.

82. மேழி போற்று

விவசாயத்தை போற்ற வேண்டும். மேழி என்றால் ஏர்க்கருவி. மேழியால் விளைவதல்லால் வேறொன்றால் விளையாவே என்கிறார் கம்பர். ஏர்க்கருவிகளால் விளையும் உணவை வேறு எதைக்கொண்டும் உருவாக்க முடியாது.

83. மொய்ம்புறத் தவஞ்செய்

முழுமனதுடன் அன்பை காட்டு . மனதில் எந்தவித சலசலப்பில்லாமல் உதவிசெய்.

84. மோனம் போற்று

மோனம் என்றால் ஆழ்ந்த சிந்தனையுடன் கூடிய ஒரு அமைதி. உனது வெற்றிக்கு அடிப்படை காரணமே உன் சிந்தனை தான். அச்சிந்தனையை போற்று.

85. மௌட்டியந் தனைக்கொல்

அறியாமையை உன் தெளிவான பகுத்தறிவால் அழித்துவிடு. நான் தான் என்ற கர்வம் ஒருபோதும் வந்துவிட கூடாது.

86. யவனர்போல் முயற்சிகொள்

பண்டைய காலத்தில் கடல் வழியே வாணிபம் செய்ய வந்த கிரேக்கர்களை யவனர்கள் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றது. அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கிய ஆகச்சிறந்த முயற்சியாளர்களான யவனர்கள் போல் முயற்சிகொள்.

87. யாவரையும் மதித்துவாழ்

எவரிடமும் வேற்றுமை பாராமல் மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்து.

88. யௌவனம் காத்தல்செய்

யௌவனம் என்றால் இளமை, அழகு என பொருள்படும். இளமையும், அழகும் குறையாமல் பார்த்துக்கொள்.

89. ரஸத்திலே தேர்ச்சிக்கொள்

நவரசத்தின் உணர்வையும் கட்டுப்பாட்டுடனும் தெளிவுடனும் தேவையறிந்து வெளிப்படுத்து.

90. ராஜஸம் பயில்

இயற்கையின் முக்குணங்களில் ஒன்றான ராஜஸ குணசத்தின் இயல்பு செயல்படுவதில் அதீத ஆர்வம், ஞானம், வீரம், முயற்சி, தருமம் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். எனவே ராஜஸம் பயில் என்கிறார்.

91. ரீதி தவறேல்

ரீதி என்பது ஒழுங்கு மற்றும் நிலைமை என பொருள்படும். எந்த ஒரு செயலிலும் ஒழுக்கத்தை பின்பற்று.

92. ருசிப்பல வென்றுணர்

பல்வேறு கலைகளை ரசனைகளை கற்றுத்தேர்ந்து வென்றுணர்.

93. ரூபம் செம்மைசெய்

ரூபம் என்பது ஒன்றின் வடிவமைப்பு ஆகும். உடல் வடிவத்தை, உடல் உறுப்புகளை சீராக வைத்துக்கொள். எந்த ஒரு கட்டமைப்பையும் அழகுடன் வைத்திரு.

94. ரேகையில் கனிகொள்

அறிவினார்க்கில்லை அதிர வருவதோர் நோய் என்பது போல எதிர்காலத்தில் நடக்க இருக்கும் ஆபத்தை முன்கூட்டியே கணிப்பவருக்கு அந்த ஆபத்து எந்தவித துன்பத்தையும் ஏற்படுத்தாது.

95. ரோதனம் தவிர்

எந்த ஒரு துன்பத்தையும் மற்றவர்களிடம் புலம்பிக்கொண்டிருப்பதை முழுவதுமாக தவிர்த்துவிடு. அது ஒரு மிகக்கேவலமான செயல் ஆகும்.

96. ரௌத்திரம் பழகு

கண் முன்னே நடக்கும் அநீதிகளை கண்டும் காணாமல் இருக்காமல் அதை கோபப்பட்டு எதிர்த்து நிற்பதற்கு பழகிக்கொள். வெளிப்பட வேண்டிய இடத்தில் வெளிப்படாத கோபமும் குற்றத்தை ஏற்படுத்தும்.

97. லவம் பலவெள்ளமாம்

சிறு துளி பெரு வெள்ளம் ஆகும். எதை ஒன்றையும் சிறியது என்று ஏளனப்படுத்திவிடாதே.

98. லாவகம் பயிற்சிசெய்

எந்த ஒரு காரியத்தை எடுத்தாலும் அதன் முழு நுணுக்கங்களையும் கற்றுத் தேர்ந்து வைத்துக்கொள்.

99. லீலை இவ்வுலகு

இவ்வுலகில் நடக்கும் அனைத்து செயல்களும் இயற்கையின் விளையாட்டே ஆகும். இன்பத்தையும், துன்பத்தையும் சரிசமமாக வைத்துக்கொள். நடக்கவேண்டிய அனைத்தும் இயற்கையின் மாற்றத்தால் சரியாகவே நடக்கும்.

100. (உ) லுத்தரை இகழ்

தீயவர்கள், அயோகியர்களை இகழ்ந்து பேசு.

101. (உ)லோகநூல் கற்றுணர்

பூமியின் இயல்பை தெளிந்து கற்றுக்கொள். உலோகம் கொண்டு உலகை வளர்ப்போம் என்ற வாக்கியமும் உள்ளது. இன்று பல வேலைவாய்ப்புகள் உலோகங்களை கொண்டு தான் உள்ளது.

102. லௌகிகம் ஆற்று

நமது பணிகளை கடமைகளை செம்மையுற செய்யவேண்டும்.

103. வருவதை மகிழ்ந்துண்

நினைப்பது கிடைக்காவிட்டாலும் நினைப்பதை விடாமல் கிடைப்பதை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்.

104. வானநூற் பயிற்சிக்கொள்

அறிவியல் சார்ந்த அனைத்து நூல்களையும் தெளிவாக கற்றுத் தெரிந்து வைத்துக்கொள். அறிவியல் சார்ந்தே அனைத்து செயல்முறைகளும் நடைமுறையில் உள்ளது. முன்னோர்களின் சில மூடநம்பிக்கை என்று சொல்லக்கூடியவற்றில் உள்ள அறிவியலை புலப்படுத்து.

105. விதையினை தெரிந்திடு

உன் சிந்தனை தெளிவானதாகவும், சரியானதாகவும் மற்றவர்களுக்கு பயனளிக்கும் விதமாகவும் இருக்கக்கூடும் என்று அறிந்து உன் செயலை தொடங்கு.

106. வீரியம் பெருக்கு

உடலின் வலிமையை அதிகமாக்கு. அது மன தைரியத்தையும், உடல் தைரியத்தையும் அதிகமாக்கும்.

107. வெடிப்புறப் பேசு

அநீதிகளை கண்டு எந்தவித அச்சமும், தயக்கமும் இன்றி வெடிப்புறப்பேசு. உள்ளத்திலே உண்மைஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்.

108. வேதம் புதுமைசெய்

சில பழைய இலக்கியங்கள், பழைய பழக்கங்கள் நடைமுறைக்கு பொருந்தாது. நடைமுறை வழக்கத்திற்கு ஏற்ப புதுமையான நூல்களை இயற்று.

109. வையத் தலைமைகொள்

உலகில் நடக்கும் எந்த ஒரு துயரத்தையும் கண்டும் காணாமல் போகாமல் அதை நீக்க ஒவ்வொருவரும் வையத் தலைமை கொள்ளவேண்டும். உலகின் பொறுப்புகளை ஒவ்வொரு மனிதனும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

110. வௌவுதல் நீக்கு

பிறர் பொருள்களை அபகரிக்கும் எண்ணத்தை உன்னுள் வைத்துக்கொள்ளாதே. அதைவிட இழிச்செயல் வேறு எதுவும் இல்லை.

**ஆத்திச்சூடி (பாரதிதாசான்)**

1. அனைவரும் உறவினர்

உரை : அனைவரும் - உலகிலுள்ள எல்லோரும்,

உறவினர்-உறவினராவார்:

2. ஆட்சியை பொதுமை செய்

உரை : ஆட்சியை-பல நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ள

ஆட்சி அனைத்தையும், பொதுமை செய்-பொதுவான ஒரே

ஆட்சி ஆக்கு.

3. இசை மொழி மேலதே

உரை : இசை-இசை (இராகம்) மொழி-அது வரும்

மொழியினால், மேலதே-மேன்னை யடைவது.

4. ஈதல் இன்பம்

உரை : ஈதல்-(பொருளையே உழைப்பையோ) பிறர்க்குக் கொடுப்பது, இன்பம் ஈந்தோர்க்கு இன்பமாகும்.

5. உடைமை பொதுவே

உரை : உடைமை-உலகின் நிலையியல் பொருள்,இயங்கியல் பொருள், மக்கள் உழைப்பின் பயன் ஆகிய உடைமை அனைத்தும், பொதுவே-உலக மக்கட்குப் பொதுவே.

6. ஊன்றுளம் ஊறும்

உரை : ஊற்று-தான் பெற்ற கல்வியிலேனும் தனக்குள்ள அறிவிலேனும் ஊன்றுகின்ற, உளம்-உள்ளமானது, ஊறும்-கருத்துக்களைப் பொழியும்.

7. எழுது புதுநூல்

உரை : புதிய நூல்-கருத்திலே புதியதான நூற்களை, எழுது-நீயாக எழுது.

8. ஏடு பெருக்கு

உரை : ஏடு-நாள், கிழமை, திங்கள்தோறும் வரும் செய்தி, கட்டுரைத் தாள்களை, பெருக்கு-மிகுதியாக்கு.

9. ஐந்தொழிற்கிறை நீ

உரை : நீ-நீதான், ஐந்தொழிற்கு-இயற்கையில் அமைந்த வற்றைக் கொண்டு இயற்றப்படும் ஆக்கல், காத்தல், இயற்றல், மாற்றல், அருளல் ஆகிய ஐந்து தொழில்கட்கும், இறை-உடையவன்.

10. ஒற்றுமை அமைதி

உரை : ஒற்றுமை-உலக மக்களிடம் ஏற்படும் மன வொற்றுமைதான், அமைதி-அமைதி எனப்படும்.

11. ஓவியம் பயில்

உரை : ஓவியம்-ஓவியத் தொழில், பயில்-நீ பயின்று கொள்.

12. ஔவியம் பெருநோய்

உரை : ஔவியம் - ஒருவனுக்குள்ள பொறாமை, பெரு நோய் - அவனுக்குத் தொழுநோய் போல் துன்பந் தருவது.

13. கல்லார் நலிவர்

உரை : கல்லார் - படிக்காதவர், நலிவர் - நலிவடை வார்கள்

14. காற்றினைத் தூய்மை செய்

உரை : காற்றினை - உன்னை அணுகும் காற்றை, தூய்மை செய்-நீ தூய்மையாக்கிக் கொள்.

15. கிழிப்பொறி பெருக்கு

உரை : கிழி-துணி நெய்யும். பொறி-பொறிகளால் ஆன

ஆலைகளை, பெருக்கு-பெருகச் செய்.

16. கீழ்மகன் உயர்வெனும்

உரை : கீழ்மகன் - அறிவில்லாதவன், உயர்வு எனும்-தான் பிறப்பால் உயர்ந்தவன் என்று சொல்வான்.

17. குள்ள நினைவு தீர்

உரை : குள்ள நினைவு குறுகிற - நினைவுகளை, தீர்-நீக்கு

18. கூன் நடை பயிலேல்

உரை : கூன்-கூனிய, நடைபயிலேல்-நடக்கப் பழகாதே.

19. கெடு நினை வகற்று

உரை : கெடு-பிறர் கெட்டுப் போவதற்குக் காரணமான, நினைவு அகற்று-நினைப்பை நீக்கு

20. கேட்டு விடை இறு

உரை : கேட்டு-உன்னிடம் பேசுவோரின் பேச்சை கொண்டு, விடை இறு-பதில் கூறு.

21. கைம்மை அகற்று

உரை : கைம்மை-கொழுநன் இறந்தால் பெண்வேறொரு வனை மணந்து கொள்ளாமல்வாழ்நாளைக்கழிக்க வேண்டும் என்ற நிலைமையை, அகற்று-நீ நீக்கி அவள்

மறுமணம் செய்து கொள்ளும் நிலையை ஏற்படுத்து.

22. கொடுத்தோன் பறித்தோன்

உரை : கொடுத்தோன்-தனக்கு உள்ளதுபோக, மிகுதி யாய் உள்ளதைப் பிறருக்குக் கொடுத்தவன். பறித்தோன்-பிறர்க்குரிய பொருளை வாணிகத்தாலும் வஞ்சத்தாலும் முன்பு பறித்தவனே.

23. கோனாட்சி வீழ்த்து

உரை : கோனாட்சி-ஒருவன் தான் விரும்பியபடி ஆளும் ஆட்சியை, வீழ்த்து-வீழ்த்தி குடியாட்சியாக்கு.

24. சதுர் பிறர்க்குழைத்தல்

உரை : பிறர்க்கு உழைத்தல்-பிறர் நலத்திற்கு உழைப் பது, சதுர்-சதுர்ப்பாடாம்.

25. சாதல் இறுதி

உரை : சாதல்-உடல் உயிர் பிரிதல், இறுதி-ஒருவனின் முடிவு.

26. சிறார் நலம் தேடு

உரை : சிறார் நலம்-ஆண் பெண் ஆகிய குழந்தைகளின் நன்மையை, தேடு-ஏற்படுத்தும்.

27. சீர்பெறல் செயலால்

உரை : சீர்பெறல்-ஒருவன் சீரடைவது, செயலால்-தன் செயலால் ஆம்.

28. சுவையுணர் திறங்கொள்

உரை : சுவை உணர்-சுவை உணர்கின்ற, திறம் கொள்-திறமை பெறு.

29. சூழ்நிலை நோக்கு

உரை : சூழ்நிலை-வினை செய்வதற்கு, அன்றுள்ள நிலைமையை, நோக்கு-ஆராய்ந்து தொடங்கு.

30. செல்வம் நுண்ணறிவாம்

உரை : நுண்ணறிவு-நுண்ணறிவால், செல்வம் ஆம்-செல்வம் தழைக்கும்

31. சேய்மை மாற்று

உரை : சேய்மை விரிந்த உலகில் உனக்கும் பிறர்க்கும் உள்ள தொலைவை, மாற்று-புதுமை ஊர்தி, தொலையறி கருவி ஏற்படுத்துவதால் இல்லாமற் செய்.

32. சைகையோடு ஆடல்தேர்

உரை : சைகையோடு-அபிநயத்தோடு கூடிய. ஆடல்-ஆடற்கலையை, தேர்-பயில்.

33. சொற்பெருக்காற்றல் கொள்

உரை : சொற்பெருக்காற்றல் - சொற்பெருக்காற்றும் ஆற்றலை கொள்-அடை..

34. சோர்வு நீக்கு

உரை : சோர்வு-உன் சொல்லிலும் செயலிலும் பிழை பாடு, நீக்கு-ஏற்படாமல் விழிப்போடிரு.

35. தளையினைக் களைந்துவாழ்

உரை : தளையினை-மதம், சாதி, பிறர் ஆட்சி ஆகிய அடிமைத்தனத்தை, களைந்து-நீக்கி, வாழ்-நல்வாழ்வை

36. தாழ்வுஅடிமை நிலை

உரை : தாழ்வு - மற்றவரைவிடச் செல்வ நிலையில் உனக்கு ஏற்பட்டுள்ள தாழ்வானது, அடிமை நிலை-உனக்கு உள்ள அடிமை நிலையேயாம்.

37. திருஎனல் உழு பயன்

உரை : திருஎனல்-செல்வம் என்று சொல்லப்படுவது, உழுபயன்-உழுவதன் விளைவுதான்.

38. தீங்கனிவகை விளை

உரை : தீங்கனி-மா, பலா, வாழை ஆகிய முக்கனியும், வகை-இனிமையும் பயனும் தருவதில் அவற்றின் இனமாகிய விளா, கொய்யா, ஆரஞ்சு, ஆப்பிள் முதலியவும், விளை-

உண்டாக்கு.

39. துன்பம் இன்பத்தின் வேர்

உரை : துன்பம்-கோணிய அரசியல் காரணமாக உனக்கேற்பட்ட துன்பமே, இன்பத்தின் வேர்-அக்கோணிய அரசியலை மாற்றி அதனாற் பெறப்போகும் இன்ப வாழ்வுக்குக் காரணம் ஆகும்.

40. தூய நீராடு

உரை : தூய-தூய்மையான (அழுக்கற்ற), நீர்-நீரில், ஆடு-உடல் தூய்மை செய்.